பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 25, செவ்வாய்க்கிழமை 07.02.2017 | கதிர் 94

## சசிகலா பதவியேற்புக்குத் தடை கோரி மனு!

சென்னை, பெப்.07

சொத்துக்குவிப்பு வழக்கில் தீர்ப்பு அறிவிக்கும் வரை சசிகலாவுக்கு முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம்செய்துவைக்க இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த சட்டப் பஞ்சாயத்து இயக்கம் சார்பில்

பக்கம் 20 »

# முஸ்லிம்களை அரவணைக்க தமிழ் மக்கள் பேரவை முயற்சி!



## 'பொங்கு சிங்களத்தை' எதிர்கொள்ளவே 'எழுக தமிழ்' என்கிறார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 07

**கிழக்கில் நடைபெறும் 'எழுக தமிழ்' நிகழ்வில் தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் முஸ்லிம் சகோதரர்களும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.**

**இது தொடர்பாகப் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்த அமைப்பின் இணைத் தலைவர்களுள் ஒருவரான வடக்கு மாகாண முதல்வர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் பேசும் மக்களின் 'எழுக தமிழ்' போன்ற ஒற்றுமையான வெளிப்படுத்தல் மூலமன்றி 'பொங்கு சிங்களத்தை' கட்டுப்படுத்த இயலாது என்றும், அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

எழுக தமிழானது மட்டக்களப்புக்கு விஜயம் செய்ய இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழ் பேசும் சகல மக்களையும் 'எழுக தமிழ்' நடைபவனியில் பங்குபற்ற அழைக்கின்றேன். எம் மக்கள் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் அண்டையிலிருந்து நாவற்

பக்கம் 19 »

## அமைச்சரவை மாற்றம் தாமதமாகும்!

சிலதினங்களில்மேற்கொள்ளப்படவிருந்த அமைச்சரவை மாற்றம்சிலமாதங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர்தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட பேச்சுக்களில்இந்தமுடிவுஎடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இந்தப்பேச்சுக்களில்ஐக்கிய

பக்கம் 20 »

## விபத்தில் இரு மாணவர் பலி!

அளுத்கம வெலிபென்ன - மீகமபகுதியில்முச்சக்கரவண்டி ஒன்று டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்து நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

. மீகம தொட்டுபொல வீதியில்

பக்கம் 20 »

# இன்று தீர்வு கிட்டாவிடில் போராட்ட வடிவம் மாறும்!

## கேப்பாபிலவு மக்கள் எச்சரிக்கை!

முல்லைத்தீவு, பெப்.07

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குள் தங்கள் மீள்குடியேற்றம் தொடர்பாக உரிய பதில் கிடைக்காவிட்டால் நாளைக் காலை 8 மணி முதல் தங்களின் போராட்ட வடிவம் மாறும் எனவும், தேவை எனில் தங்களில் ஒருவர் தற்கொலை செய்வார்எனவும்உயிரைமாய்த்தேனும் நிலத்தை மீட்பதில் தாங்கள் உறுதியாக இருக்கிறார்கள் எனவும் கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் விமானப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிலக்

பக்கம் 20 »

## அளப்பு அருணாசலம்



அப்ப...உவ சசிகலா பாடு 'சாண் ஏற முழம் சறுக்கின கதை தான்' எண்டு சொல்லுங்கோ...!

## 'சைட்டம்' நிறுவன அதிகாரியின் வாகனம் மீது சூடு

'சைட்டம்' தனியார் மருத்துவக்கல்லூரியின்பிரதானநிறைவேற்று அதிகாரி சமீர சேனாரத்ன பயணித்த வாகனத்தின் மீது நேற்று இரவு மாலபே பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முகத்தை மூடித் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டைமேற்கொண்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்

பக்கம் 20 »

## இந்திய மீனவர்கள் பாதிப்பாம்

தமிழகத்தைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் மீனவர்கள் நேற்றுக் காலை தொழில் செய்ய முடியாத நிலையில் கரை திரும்பியுள்ளனர் என இந்தியச் செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை கடற்படையினர் தம்மைத் துரத்தினார்கள் என்றும் மீன்பிடிவலைகளை அறுத்தெறிந்தனர் என்றும் தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு சுமார் 20 படகுகளில் சென்ற

பக்கம் 20 »

# யுத்தக் குற்ற விசாரணைக்கு நீதிமன்றம் தேவையே அற்றது என்கிறார் சந்திரிகா

கொழும்பு, பெப்.07

2009 யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற விசாரணை தேவையற்றது என்று கூறியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

பக்கம் 20 »

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்

### படை முகாமை அகற்றும் வரை தொடரும்

முல்லைத்தீவு, பெப்.07

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகரில் உள்ள படை முகாமை அகற்றக் கோரியும் கேப்பாபிலவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் அப்பகுதி மக்கள் மேற்கொண்டு வருகின்ற போராட்டத்தின் நான்காவது நாளான நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முற்றுகையிடப்பட்டது.

பக்கம் 20 »

## காக்கைதீவில் கஞ்சாவுடன் கைது

ஒரு கிலோ 840 கிராம் எடையுடைய கஞ்சாவை வைத்திருந்த நபர் ஒருவரை காக்கைதீவு சந்தைப் பகுதியில் வைத்து பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய சண்முகம் சிறிஸ்குமார் என்ற குடும்

பக்கம் 20 »

## நாமலின் பெயரில் டுபாய் வங்கியில் பல லட்சம் அமெரிக்க டொலர்கள்!

கொழும்பு, பெப்.07

டுபாய் வங்கிக் கணக்கு ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரில் பல மில்லியன் டொலர் பணம் இருப்பது தொடர்பான சாட்சியங்களைப் பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக்கிறார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட டுபாய் வங்கியை இலங்கைப் பொலிஸார் அணுகி, அந்த வங்கிக் கணக்குப் பற்றிய மேலதிக விவரங்களைக் கோரியுள்ளனர். ஆனால், இதுவரை அந்த விடயங்களை வழங்குவதற்கு சம்பந்

பக்கம் 20 »

# பாதுகாப்பான சேவை வழங்குக! இல்லையேல் சட்ட நடவடிக்கை

## வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு



பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்குகின்ற தரப்பினர்கள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்துகின்ற சாரதிகள் ஆகியோர் அடுத்தவர்களது உயிர் மீது அக்கறையுள்ளவர்களாகச் செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள தனது அறிக்கையில் கோரியுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

எமது பொதுமக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து சேவையை வழங்குவதென்பது மிகுந்த சவாலுக்குரியதாகவே காணப்படுகின்றது. அதற்கான காரணங்களைக் கண்டறிந்து சீர்செய்வது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எமது மாகாணத்தில் தினந்தோறும் ஏதோ ஓர் மூலையில் வீதி விபத்தால் மக்களது பெறுமதிமிக்க உயிர்கள் வீணாகப் பறிக்கப்படுவதும் பலர் நிரந்தர மாற்றுத்திறனாளிகளாக மாற்றப்படுவதும் அதிகரித்தவண்ணமே உள்ளன. இதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற தரப்பினர்கள் வீதி ஒழுங்குகளை ஒழுங்காகப் பின்பற்றாது நடப்பதும் மேலும் போக்குவரத்து சேவையை வழங்கும் தரப்பினருக்கிடையில் காணப்படுகின்ற கண்மூடித்தனமான போட்டித் தன்மையும், ஒரு சீரான இணைந்த நேர அட்டவணையைப் பின்பற்றாமையும் வீதியில் பயணிக்கின்ற ஒரு சில பொது மக்களின் அசமந்தப்போக்கும் முக்கிய காரணங்களாக காணப்படுகின்றன.

பச்சிளம் சிறார்களை பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர் தமது பிள்ளைகள் மீண்டும் வீடு வந்து சேருவார்களா என்று ஏங்கும் அளவிற்கு வீதி விபத்துக்கள் தலைவிரித்தாடுகின்றன. இவ்வாறான ஓர் ஐயத்தன்மையை நீக்கி அநியாயமாக பறிக்கப்படும் ஒவ்வொரு உயிரையும் காக்க வேண்டும் என்ற நோக்கோடும் எமது மக்கள் ஒரு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையை அனுபவிக்கவேண்டும் என்ற எண்ணத்துடனுமே ஒட்டுமொத்த பொதுமக்களது நலனையும் நோக்கிய தாகவே எனது நடவடிக்கைகள் இருந்துவருகின்றன. இதற்கு எதிராக எத்தகைய எதிர்ப்புவரினும் அதனைத்தாண்டிச் சென்று நீதியை நிலை நாட்டுவது எனது கடமை என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகையில் நான் எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கு எமது பொது மக்கள் எனக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கேட்டு நிற்கின்றேன்.

இல்லையேல், இன்னும் எத்தனையோ பெறுமதிமிக்க உயிர்களை வீதி விபத்துக்குப் பலி கொடுக்கப்போகின்றோம் என்பது மட்டும் உறுதி. இன்று அடுத்தவர் உயிர்தானே போகின்றது என அசமந்தமாக இருப்போமெனில் நாளை நாமோ அல்லது நமது பிள்ளைகளோ இதனைச் சந்திக்க நேரிடும் என்பதை மறந்துவிடக்கூடாது. எமது பொது மக்களும் புத்தி ஜீவிகளும் தூர நோக்கோடு சிந்திப்பீர்கள் என நான் நம்புகின்றேன்.

கடந்த ஜனவரிமாதம் 16 ஆம் திகதி வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட புதிய மத்திய பேருந்து நிலையம் மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வாவினால் உத்தியோக பூர்வமாக திறந்து மக்களது பாவனைக்கு கொடுக்கப்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். அன்றய தினமே இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறையினர் ஆகிய இரண்டு தரப்பினரையும் குறித்த புதிய பேருந்து நிலையத்தில் இருந்தே தமது சேவைகளை வழங்க வேண்டும் என்ற ஒரு கட்டளை சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் மத்திய போக்குவரத்து அமைச்சர், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர், வட மாகாண பிராந்திய முகாமையாளர், வவுனியா மாவட்ட சாலை முகாமையாளர் மற்றும் அன்றைய தினம் வருகை தந்திருந்த போக்குவரத்து பிரதி அமைச்சர், முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் முன்னிலையில் கண்டிப்பான உத்தரவாக வழங்கப்பட்டது.

குறிப்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையை வழங்காமல் இருப்பார்களென்று சொன்னால் மீறுகின்ற தரப்பினர்மீது தான் உரிய நடவடிக்கைகள் எடுப்பார் எனவும், வேண்டுமானால் சம்பளத்தை நிறுத்துவார் எனவும் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கூறியிருந்தார் என்பதனை இங்கு தெளிவாக சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மேலும் அச்சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் என்ற வகையில் நான் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தேன். இணைந்த நேர அட்டவணை தற்போது தயாராக உள்ளது, அதனை அமுல்படுத்துகின்ற போது அதற்கு எதிராகச் செயற்படுகிறவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டேன். இச்செய்தி பிழையாக திரிபுபடுத்தப்பட்டு இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி, நடத்துனர்களுக்கு கூறப்பட்டுள்ளதாக தற்போது அறியமுடிகின்றது. ஒரு செய்தி கூறப்படும்போது அதன் உண்மைத்தன்மை என்ன என்பது தொடர்பில் அலசி ஆராய்வது எமது கடமை என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தும்போது அதிகாரிகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் சரியான ஒத்துழைப்பை வழங்கினால் மட்டுமே மக்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து சேவையை வழங்கமுடியும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கொடும்பாவி எரிப்பதனால் அநீதி, நீதியாகிவிடாது. நீதி அநீதியாகிவிடாது. ஆகவே பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற அனைத்து தரப்பினரும் ஒற்றுமைப்பட்டு எமது பொதுமக்களுக்கு பாதுகாப்பான சேவை வழங்குவதற்கு முன்வாருங்கள். இல்லையேல் சட்டநடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழி எனக்கு தெரியவில்லை. – என மேலும் தெரிவித்துள்ளார். (70)

# வேலணையில் விபத்து குடும்பஸ்தர் மரணம்

## அவரது மனைவி படுகாயம்

வேலணை,பெப்.07

தீவகம் வேலணைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில், திருமணமாகி ஆறு நாள்களேயான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். அவரது மனைவி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முற்பகல் 11மணியளவில் வேலணை அராலி சந்தியில் இடம்பெற்றது.

வேலணையில் இருந்து ஊர்காவற்றுறை பிரதான வீதியை நோக்கிச்சென்ற மோட்டார்சைக்கிளும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் விபத்தில் சிக்கின.

இதன்போது டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதி சிறிது தூரம் இழுத்துச் சென்று கடலில் பாய்ந்தது.

மேற்படி விபத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பிரபாகரன் (வயது28) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரது மனைவியான நிறஞ்சனா படுகாயமடைந்தார். இவர்களுக்கு திருமணமாகி ஆறு நாள்கள் எனப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

டிப்பர் வாகனச்சாரதியை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்தனர். (ம-07)

# அரிசிக்கு விலை நிர்ணயம்

நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கிணங்க, ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 80 ரூபா, ஒரு கிலோகிராம் நாட்டரிசி 70 ரூபா, ஒரு கிலோகிராம் பச்சை அரிசி 70 ரூபா என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விலை விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பன்றிக்கெய்தகுளத்தில் விபத்து; பெண் பலி; இருவர் படுகாயம்!

வவுனியா பெப்.07

வவுனியா – பன்றிக்கெய்த குளத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மூன்று பிள்ளைகளின் தாயார் பலியானார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

பெரியமடுவைச் சேர்ந்த யோகேஸ்வரன்ஜெனனி (வயது 33) என்பவர் உயிரிழந்தார்.

இவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த அவரின் உறவினரான 22 வயதுடைய பெண்ணும் அவரது 8 வயது மகனும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த பெண் பன்றிக்கெய்தகுளம் பாடசாலையில் இருந்து அயல் வீட்டில் வசிக்கும் உறவினர் முறையான பெண்ணையும் அவரது பிள்ளையையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்றபோதே மேற்படி விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்துத் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

# வளர்ப்பு நாய்களுக்கு நாளை தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள், நல்லூர் பொதுச் சுகாதாரப்பரிசோதகர்பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி (ஏ.ஆர்.வி.) போடப்படவுள்ளது.

அதன்படி, நாளை புதன் கிழமை தடுப்பூசி போடப்படும் இடங்கள் வருமாறு:-

* வைமன் வீதி, எடிசன் அக்கடமி அருகில் – காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை.

* அம்மன் வீதியில் – முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை.

* ஆடியபாதம் வீதி, முத்தமிழ் முன்பள்ளியில் – பிற்பகல்.2.30 மணி முதல் மாலை 4 மணி வரை. (இ)

# வடக்கில் கலப்பு நீதிமன்றமா? ஒருபோதும் இடமளிக்க முடியாது

## கர்ச்சிக்கிறார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, பெப்.07

வடக்கில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை நிறுவி, போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்கலாம் என்ற கருத்தை முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியிட்டிருக்கிறார். அது, அவரது கனவாக மட்டுமே இருக்க முடியும். அதற்கு ஒருபோதும் இடமளிக்க இயலாது.

– இவ்வாறு சீற்றத்துடன் கருத்து வெளியிட்டுள்ளார் அமைச்சர் மஹிந்த சமரசிங்க.

களுத்துறையில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் பேசுகையிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறாக முழங்கித் தள்ளினார்.

எமது அரசியல்வாதிகள் சிலர் வெளிநாட்டுச் சக்திகளுக்கும், அமைப்புகளுக்கும் அடிமைகளாகச் செயற்பட்டு வருகிறார்கள். அதற்கு நாம் அனுசரணையாக இருக்கக்கூடாது.

எமது இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் எந்த வகையிலும் நாம் துரோகம் இழைக்கக் கூடாது. வடக்கு மாகாண முதலமைச்சர் கண்டிருக்கும் கனவாகவே இதனைக் கொள்ளலாம்.

எமது பாதுகாப்புப் படையினருக்கும் பொலிஸாருக்குத் துரோகம் செய்ய எமது ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார் என்பதில் நாம் திடமாக உள்ளோம்.

– என்றும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

# பாவனையாளர்களே கவனம்! 'டை' பூசிய சிவப்புச் சம்பா!!

நீங்கள் சிவப்புச் சம்பா அரிசி உணவை மிகவும் விரும்பிச் சாப்பிடுபவரா? கவனம்!

சிவப்புச் சம்பா என்ற குறியீட்டுடன் விற்கப்படும் 'புது ரக' அரிசி இப்போது சந்தைக்கு வந்துள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உணவுத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில் மனித உணவுக்கு ஒவ்வாத, கலப்பட மோசடி வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது.

சாதாரண வெள்ளை அரிசி, சிவப்பு "டை"யுடன் தோய்க்கப்பட்டுக் காயவைக்கப்பட்டு விற்பனையாவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வகை அரிசியைத் தண்ணீரில் கழுவியபோது, சிவப்பு "டை" கரைந்து வெள்ளை நிறமாக மாறியதாகப் பல்கலைக்கழக விவசாயத் திணைக்கள ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

மோசடி செய்யப்பட்ட, கலப்பட அரிசியைத் தொடர்ந்து உண்பதன் விளைவாக, ஈரல் புற்றுநோய் மற்றும் சிறுநீரகப் பாதிப்பு சம்பந்தமான நோய்கள் உண்டாகும் என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி றோகித பிரசன்னா தெரிவித்துள்ளார். (அ)

# கட்டுரையாளர் விவரம்

இன்றைய 9 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள "யாழ்ப்பாணத்துக்கு ஆறு உருவாக்கும் திட்டம் சாத்தியப்படுமா?" என்ற கட்டுரையை மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி. வழிமூலம் 'தி ஐலண்ட்' : திருஆறுமுகம். நன்றி: புதினப் பலகை.

# கீரிமலையில் சங்காபிஷேகம்

தெல்லிப்பழை, பெப்.07

கீரிமலை ஸ்ரீ மஹா முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு நாளைய தினம் புதன்கிழமை சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறவுள்ளன. அடியார்கள் யாவரும் கலந்து கொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு ஆலய ஆதீன கர்த்தா ந.உமாபதீஸ்வரக் குருக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

# புலிகள் மீண்டும் தலைதூக்குவது உறுதி; மஹிந்தவுக்கான பாதுகாப்பை அதிகரிக்குக!



## கம்மன்பில எம்.பி. வலியுறுத்து

விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்குவதாக உறுதி செய்யப்பட்டுள்ளமையால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை மீள வழங்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார்.

பிவித்துரு ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

2013ஆம் ஆண்டிலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக அப்போது செயற்பட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா இரகசிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதனிடையே கடந்த மாதம் 13ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்துப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் முன்னாள் போராளிகள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் விடுதலைப் புலிகளை மீள எழச்செய்வதற்கான ஆயுதப் போராட்டத்துக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர்.

மருதங்கேணிப் பிரதேசத்தில் பிரபல நபர் ஒருவரைக் கொலை செய்வதற்காக வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றையும் கைதுசெய்யப் பட்டவர்களிடம் இருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். அது மட்டுமல்ல மேலும் பல வெடி பொருள்களும் மீட்கப்பட்டன. விடுதலைப் புலிகள் மீள எழுவார்கள் என்பதை நாங்கள் தொடர்ந்தும் கூறிவருகின்றோம். இப்போது புலனாய்வுப் பிரிவும் அதனையே தெரிவிக்கின்றது. அதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றுமாறு வலியுறுத்தி வந்தாலும் அங்கிருந்து படையினரை மீள அழைக்கக் கூடாது.

சமஷ்டித் தீர்வைக் கோரி வரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கே விடுதலைப் புலிகளிடமிருந்து மரண அச்சுறுத்தல் காணப்படுமாயின் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எந்தளவு உயிர் அச்சுறுத்தல் காணப்படும்?

இந்தநிலையில் விடுதலைப் புலிகளாலேயே மஹிந்த ராஜபக்ஷவும் கொலை செய்யப்படட்டும் என்று பாதுகாப்பையும் அரசு குறைத்துள்ளது. எனவே, முன்னர் இருந்த அதிகளவான பாதுகாப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்கு மீள வழங்கும்படி கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ)

# நாளை சில இடங்களில் மின் தடை

யாழ்ப்பாணம், பெப்.07

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களில் சில இடங்களில் மட்டும் நாளை புதன்கிழமை காலை 8 மணியில் இருந்து 6.30 மணிவரை மின்சாரத் தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேசத்தில் கட்டுவன், ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு, சூராவத்தை சுன்னாகம், சுன்னாகம் சிவன் கோவிலடி, கைதடி மத்தி நவபுரம், வன்னியசிங்கம் வீதி ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதேசத்தில் நேரிய குளத்தில் இருந்து செட்டிகுளம் வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், செட்டிகுளம் பா.நோ.கூ சங்கம் ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் நானாட்டானில் இருந்து அச்சங்குளம் வரை, பள்ளிமுனை ஆகிய இடங்களிலும் மின் தடை ஏற்படும் என்று பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மாலபேக்கு எதிராக வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்



ரணில், மைத்திரியின் அரசு கல்வி, சுகாதாரத்தை நாசமாக்கின்றது. மக்களே உரிமைகளை வென்றெடுத்திடப் போராடுவோம் என்னும் தொனிப்பொருளில் வவுனியாவில் கையெழுத்துப் பெறும் நிகழ்வு ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா, மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக முற்பகல் 10 மணியளவில் ஒன்றிணைந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் ஒருங்கமைப்புச் செயற்பாட்டுக் குழு என்பவற்றின் ஏற்பாட்டில் இக் கையெழுத்துப் போராட்டம் மற்றும் விழிப்புணர்வு என்பன நடைபெற்றன.

கல்வி, சுகாதாரம் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்காக மாலபே சைட்டம் திருட்டுப்பட்ட கடைக்கு எதிராகவும், பாடசாலைகளில் பணம் அறவிடுவதற்கு எதிராகவும், தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் இதில் கையெழுத்து இடுங்கள் என க்கோரிக்கை விடப்பட்டதுடன், இளைஞர், யுவதிகள் பலரும் வருகை தந்து தமது கையொப்பங்களை வழங்கினர். (100)

# ரயில் திணைக்களம் தனியார் மயமாகாது!

## நிமால் தெரிவிப்பு

ரயில் திணைக்களத்தை தனியார் மயப்படுத்தவோ அல்லது அதிகாரசபையாக மாற்றியமைக்கவோ எவ்வித உத்தேசமும் கிடையாது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ரயிலில் பயணிப்போரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், நாட்டில் பயணிகளில் 8 வீத மானவர்களே ரயில் சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ரயில் இயந்திரங்கள் மற்றும் ரயில் பெட்டிகளைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# உடற்பயிற்சி தேசிய வாரத்தை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி



கொழும்பு, பெப்.07

நாட்டில் அதிகரித்து வரும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய விளையாட்டுத்துறை அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வாரம் நேற்று ஆரம்பமாகியது. இது எதிர்வரும் 12ஆம் திகதி வரை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்றது. அதன் பின்னர் நடைபெற்ற நடைபவனியிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

அதற்கிணைவாக அனைத்து அரசநிறுவனங்களிலும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

'நலம், மகிழ்ச்சி, வெற்றிக்காக விளையாட்டு' என்பது இம்முறை விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மேம்படுத்தல் தேசிய வாரத்தின் தொனிப் பொருளாகும். இவ்வாரத்தில் இவ்விடயம் தொடர்பான கருத்தாடல்கள், வெளியீடுகள், விரிவுரைகள், பதாகைகளைக் காட்சிப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக மக்கள் தெளிவூட்டப்படவுள்ளனர். (எ)

மணமக்கள் விபரம்
☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி - 08.30 a.m - 02.00 pm

மணமகள் விபரம்

4017 | வே
1965 | காரைநகர் | 162 cm
Business | இலங்கை | Divorced
பூரட்டாதி (மீனம்)

4555 | வே
1976 | காரைநகர் | 175cm
Bank Manager | இலங்கை
பூசம்(கடகம்) | கி.பா: 98 | செவ்: 8

6828 | வே
1977 | காரைநகர் | 168 cm
Agent & Distributor | இலங்கை
சித்திரை (துலாம்) | கி.பா: 69 | செவ்: 7

6807 | வே
1978 | காரைநகர் | 170 cm
Farm Planning Officer | இலங்கை
ரேவதி (மீனம்) | கி.பா: 16

3370 | வே
1981 | காரைநகர் | 167 cm
Accountant | இலங்கை
சித்திரை (கன்னி) | கி.பா: 35 | செவ்: 12

மணமகள் விபரம்

4292 | வே
1975 | காரைநகர் | 160 cm
Teacher | இலங்கை
மகம் (சிம்மம்) | கி.பா: 17

6801 | வே
1978 | காரைநகர் | 158 cm
Music Teacher | இலங்கை
பூசம்(கடகம்) | கி.பா: 55 | செவ்: 8

3831 | வே
1981 | காரைநகர் | 162 cm
Teacher | இலங்கை
சித்திரை (துலாம்) | கி.பா: 16

q5539 | வே
1981 | காரைநகர் | 170 cm
Studying CIMA | இலங்கை
பூசம்(கடகம்) | கி.பா: 38 | சூரி செவ்: 5

3754 | வே
1982 | காரைநகர் | 165cm
இலங்கை
திருவோணம் (மகரம்) | கி.பா: 20

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480 /3c, காலி வீதி, வெள்ளவத்தை
011 406 32 82
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
021 492 75 27

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சசிகலாவின் அரசியல் எதிர்காலம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில்!

தமிழக முதல்வராக இருந்த செல்வி ஜெயலலிதா சுகவீன முற்றார் என்று அறிவித்திருந்தமையைத் தொடர்ந்து தமிழக அரசியலில் ஏற்பட்ட திடீர் திருப்பங்களுக்கும், பரபரப்புக்கும் குறைவில்லை என்றாகிவிட்டது நிலைமை.

அதன் உச்சக்கட்டமாகத் தமிழகத்தின் புதிய முதல்வராக செல்வி ஜெயலலிதாவின் உடன் பிறவாத் தோழி சசிகலா தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டு இருபத்துநான்கு மணிநேரம் முடிவதற்குள், ஜெயலலிதா, சசிகலா உட்பட நால்வருக்கெதிரான சொத்துக் குவிப்பு வழக்கின் மேன்முறையீடு மீதான தீர்ப்பு அடுத்தவாரம் வெளியாகும் என்ற அறிவிப்பு இந்திய உச்சநீதிமன்றத்திலிருந்து வந்திருக்கின்றது.

ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை, அவரது மரணத்தின் பின்னால் புதைந்து கிடக்கும் மர்மங்கள், இரகசியங்கள் குறித்த சர்ச்சைகள் போன்றவை கூட இன்னும் அடங்கவில்லை.

எழுபது நாள்களுக்கு மேல் சென்னை அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற முதல்வர் ஜெயலலிதாவை, தமிழகத்தின் ஆளுநரால் தன்னும் - அவர் வைத்தியசாலைக்குச் சென்றும் கூட - நேரில் பார்க்க முடியவில்லை. மூடிய அறைக்குள் மூடுமந்திர சிகிச்சைதான் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது.

ஒரு முதல்வருக்கு இப்படி மூடுமந்திரச் சிகிச்சை அளித்ததன் பின்னணியில் பல 'கிரிமினல்' மூளைகள் செயற்பட்டன என்ற சந்தேகம் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்துத் தமிழர்களுக்கும் உண்டு.

'முதல்வர் ஜெயலலிதா தேறிவிட்டார், இதோ இடைத்தேர்தலில் மக்களைத் தமது கட்சிக்கு வாக்களிக்கக் கோரும் அறிக்கையில் தாமாகவே வாசித்து ஒப்பமிட்டார்' - என்றெல்லாம் அறிவிக்கப்பட்டது.

திருப்பரங்குன்றம், அரவக்குறிச்சி, தஞ்சாவூர் இடைத்தேர்தல்களை ஒட்டி, அச்சமயம் அப்பலோவில் சிகிச்சை பெற்று வந்த ஜெயலலிதா, தாமே ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கை என்ற பெயரில் அவரது ஒப்பத்துடன் நகல் பிரதிகள் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால், அவர் அதில் ஒப்பமிடவில்லை, அவரது கைரேகையே அதில் பதிக்கப்பட்டது என இப்போது செய்தி வெளியாகியுள்ளது.

சிகிச்சை பெற்ற அந்த எழுபத்திரண்டு நாள்கள் காலத்தில் முதல்வரின் ஒரு படம் கூட வெளிவரவில்லை.

அது எதுவுமே நடக்காமல், மூடுமந்திர சிகிச்சையுடன், சாவும் மூடுமந்திரமாக நடந்தேறி அறிவிக்கபட்டது. உண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா நோயினால் இறந்தாரா அல்லது சாகடிக்கப்பட்டாரா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் இன்னும் தீராத சந்தேகம் தரும் விடயமாக உள்ளது.

இந்தச் சமயத்தில் தான் முன்பின் மக்களையோ, தேர்தலையோ சந்தித்திராத சசிகலா பின் கதவால் ஆட்சிப் பீடத்துக்கு - அதிகாரக் கதிரைக்கு - நுழைகின்றார்.

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறைமை, யாரையும் பார்க்கவிடாமல் அவரை 'மூடிய சிறைக்குள் வைத்து' சிகிச்சை அளித்தமை, ஜெயலலிதாவின் மர்ம மரணம் போன்றவற்றுக்கெல்லாம் யார், சூத்திரதாரியாக இருக்கமுடியும் - இருக்கக்கூடும் - என்று தமிழக மக்கள் சந்தேகப்பட்டார்களோ, அவரே அந்தச் சந்தேகங்கள் எல்லாம் நீங்கும் முன்பாக பின் கதவால் ஜெயலலிதாவின் பதவிக்குக் குறிவைத்து அதனை எட்டும் நிலைமைக்கு வந்திருந்தார்.

செல்வி ஜெயலலிதாவிடம் மற்றவர்கள் பிடுங்கியெடுக்கக் கூடியவையாக இருந்தவை இரண்டு. ஒன்று - சொத்து, மற்றையது - பதவி.

அவரது மர்ம மரணத்தை அடுத்து அந்த இரண்டுமே குறிப்பிட்ட ஒரு நபரை எட்டுமாயின், அந்த மர்ம மரணத்துக்காக அந்த நபர் மீது வைக்கப்பட்ட சந்தேகம் இயல்பாகவே இரட்டிப்பாவது தவிர்க்க முடியாததே.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா மற்றும் சகபாடிகளுக்கு கீழ்நீதிமன்றம் சிறைத்தண்டனையும், பெரும் அபராதமும் விதித்தது. அதனையடுத்து ஜெயலலிதா தமது முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டியவரானார்.


எனினும், உயர்நீதிமன்றத்தில் அவர் செய்த மேன்முறையீடு ஏற்கப்பட்டு அவரும், சசிகலாவும் சகாக்களும் விடுதலை செய்யப்பட்டமையால் ஜெயலலிதா மீண்டும் முதல்வராக முடிந்தது.

ஆனாலும், அந்த விடுதலைத் தீர்ப்புக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரணை செய்த உச்சநீதிமன்றம் தீர்ப்பை வழங்காமல் ஒத்தி வைத்திருந்தது. நீண்டகாலம் அந்த நிலைமை நீடித்தது.

இப்போது சசிகலா மீண்டும் முதல்வராகிறார் என்ற அறிவிப்பு வந்த கையோடு, அந்தத் தீர்ப்பு அடுத்த வாரம் வெளியாகும் என உச்சநீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது. அதற்கு எதிராக மேன்முறையீடு செய்ய வாய்ப்பில்லை.

உச்சநீதிமன்றம் வழங்கப் போகும் தீர்ப்பு சசிகலாவின், தமிழக முதல்வர் என்ற கனவை ஒரு வாரத்துடன் கலைக்குமா? அல்லது அவரது முதல்வர் பதவியை உறுதிப்படுத்துவது போல அமையுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




# தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஜனநாயகத்துக்கு பெரும் வெற்றி

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.07

நல்லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இது ஜனநாயகத்துக்குப் பலம் சேர்க்கும் மாபெரும் வெற்றியாகும் என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய தான் வழங்கிய வாக்குறுதியை அவர் நிறைவேற்றியுள்ளார். இது நல்லாட்சி அரசின் மாபெரும் சாதனையாகும்.

ஜனநாயகத்துக்கு பலம் சேர்க்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. அது அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டம். ஆனால், துரதிஷ்டவசமாக இது குறித்து முஸ்லிம் சமூகம் விழிப்பாக இல்லை. இந்தச் சட்டத்தின் பயன்பாடுகள் தொடர்பில் சிறுபான்மைச் சமூகத்துக்குத் தெளிவூட்ட வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகளை- உரிமைகளைச் சரியான முறையில் அனைவரும் பயன்படுத்த வேண்டும். மாறாக, அந்தச்சட்டத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவது அதன் செயற்பாடுகளுக்குப் பாதிப்பாக அமையும்.

இந்தச்சட்ட மூலத்தை கொண்டு வருவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பக்கபலமாக இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகியோருக்குப் பாராட்டுக்களையும் - நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.- என்றுள்ளது. (எ)

# நல்லாட்சி அரசில் மோசடிகள் இடம்பெறாமல் தடுக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை

கொழும்பு, பெப். 07

நல்லாட்சி அரசு மோசடியான செயல்களில் ஈடுபடக் கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த அரசில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு முன்னதாக, நல்லாட்சி அரசு மோசடிகள் இடம்பெறுகின்றமையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்தனகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசு கடந்த அரசு மேற்கொண்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் செய்து வருவதாகவும், எனினும் தற்போதைய அரசிலும் மோசடிகளில் ஈடுபடும் அமைச்சர்கள் உள்ளனர். அவ்வாறு மோசடியில் ஈடுபடுபவர்கள் குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)



டெங்கு நோய் இறப்புக்களை தடுப்போம்.

பாவனையில் இல்லாத Commode களை திறந்த நிலையில் பேணாது மூடிய நிலையில் பேணுவோம். அவற்றிற்கான நீர்வழங்கல் பெட்டிகளின் (Cistern) மூடிகளை சரியான முறையில் பொருத்தியிருப்பதனை உறுதிசெய்வோம்.

"சூழலில் நீர் தேங்காது பேணுவோம்.
நீர் உள்ள இடங்களில் நுளம்பு பெருகாது தடுப்போம்."

தகவல் – சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை – யாழ்ப்பாணம்

### நாளை

08.02.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை நண்பகல் 12.08 வரை
திதி : துவாதசி மு.ப 11.21 வரை

சுபநேரம் : 5.05 – 06.35 வரை
இராகுகாலம் : 12.35 – 2.05 வரை


# கிளிநொச்சி ரயில் நிலையத்தில் மாற்றுத் திறனாளிகள் பெரும் அவதி

## அமைக்கப்பட்ட அணுகு வசதியால் பயனில்லை

கிளிநொச்சி, பெப்.07

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு என அமைக்கப்பட்டுள்ள அணுகு வசதியை மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர் என மாற்றுத் திறனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த அணுகு வசதி வழி மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலியுடன் செல்வதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படவில்லை என்றும், அதன் சரிவுடன் கூடிய தன்மை சக்கர நாற்காலிக்குரிய வகையில் அமைக்கப்படவில்லை என்றும் மாற்றுத்திறனாளிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



அத்தோடு பொதுக் கட்டடங்களில் அணுகு வசதி அமைக்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் பெரும்பாலான இடங்களில் அவ்வ நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும், இதனால் தங்களின் சுதந்திரமான நடமாட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மாற்றுத்திறனாளிகள் தெரிவித்துள்ளனர்.

சில பொதுக்கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளின் மேல் மிகவும் அக்கறை செலுத்தி அணுகும் வசதிகள் மாபிள்கள் பதித்து அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு அமைக்கப்படும் வழியை தங்களால் பயன்படுத்த முடியாத நிலையே ஏற்பட்டுள்ளதும் என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (இ-70)

## ஆதிபராசக்தி பீடத்தில் சிறப்பு பூசைகள்

நெல்லியடி, பெப்.07

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தில் (கிளானை - அல்வாய்) நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் தைபூசத் தினத்தின் சிறப்புப் பூசைகள் மற்றும் அபிஷேகம் என்பன நடைபெறவுள்ளன. (இ)

# இணுவில் கந்தசுவாமி ஆலய பாற்குட பவனி வியாழனன்று

இணுவில், பெப்.07

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை தைப்பூசத் திருவிழா இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 5 மணிக்குப் பூசை இடம்பெற்று காலை 6 மணிக்கு இணுவில் வல்லப்பர் வைரவர் ஆலயத்தில் இருந்து ஆயிரத்தெட்டுப் பாற்குட பவனி ஆரம்பமாகும். காலை 8 மணிக்கு விசேட சங்காபிஷேகம் இடம்பெற்று பாற்குடப் பவனியிலிருந்து கொண்டு வரப்படும் பால் மூலம் ஆறுமுகப் பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு, ஆயிரத்தெட்டு பானைகளில் பொங்கல் நடைபெறும்.

தொலைவிலிருந்து அ பொங்கல் செய்ய வரும் அடியவர்களின் நலன்கருதி பொங்கலுக்குரிய அனைத்துப் பொருள்களும் ஆலய முன்றிலில் பெற்றுக்கொள்ள முடியும்.

யாத்திரிகர்கள் ஆலயத்தில் தங்கிச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ)



அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த யாழ்.பல்கலைக்கழக மகளிர் விடுதியை வடமாகாணசபை உறுப்பினரும் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம், சிவன் அறக்கட்டளை நிறுவன ஸ்தாபகரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கொள்கை பரப்பு செயளாளருமான கணேஸ்வரன் வேலாயுதம், வல்வெட்டித்துறை முன்னாள் நகரசபை உபதலைவர் சதீஸ் ஆகியோர் கடந்த வியாழக்கிழமை சென்று பார்வையிட்டு மாணவர்களுடன் விவரங்களை கேட்டறிந்தனர். தேவையான உதவிகளை வழங்குவதாகவும் அவர்கள் கூறினர். (இ)

## மெய்வன்மைப் போட்டி

கொக்குவில், பெப்.07

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் கு.திலீபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.கோ.வரதராஜமூர்த்தி மற்றும் விளையாட்டு மருத்துவ அதிகாரி ச.அறிவுச் செல்வன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

* * *

வல்வெட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.சிறீஸ்குமார் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ், சிறப்பு விருந்தினராக ஹரி என்ஜினியரிங் முகாமைத்துவப் பணிப்பாளர் சோ.யாதவன், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் ச.இரத்தினகோபால் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# கிராம உத்தியோகத்தர் கௌரவிப்பு யாழ். செயலகத்தில் இன்று நிகழ்வு

## அவர்களுக்கு ஹேமலதா ஞாபகார்த்த விருது

யாழ்ப்பாணம், பெப்.07

மாவட்ட மட்டத்தில் சேவையாற்றிய கிராம அலுவலர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மறைந்த கிராம அலுவலர் நவாலியூர் ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ். செயலகத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் நா.வேதநாயகன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிப்பார்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலாளர் மட்டத்தில் முகாமைத்துவப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிராம அலுவலர்களுக்கும் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற கிராம அலுவலர்களுக்கும் சான்றிதழ்களும் விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி 'லீப் போர்வேட்' (முன்னோக்கிப் பாய்தல்) இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த வேளையில் விமானத் தாக்குதலில் பலியானார் ஹேமலதா. இவருடன் சேர்த்து 147பேர் பலியாகியிருந்தனர்.

ஹேமலதா ஞாபகார்த்தமாக முன்னாள் அரச அதிபர் கே.கணேஷின் காலத்தில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதியின் பிரகாரம் மக்களுக்கு பயன்மிகு சேவையாற்றி வரும் கிராம அலுவலர்கள் விருதுகள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. (இ)


## குடும்பநல உத்தியோகத்தர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.07

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட குடும்பநல உத்தியோகத்தர் விடுதி நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு திறந்து வைக்கப்படும். யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் க.நந்தகுமார் விடுதியை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார். (இ-21)

## மணவாளக் கோல விழா

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம் விசேட பூசையும் இடம்பெறும். இரவு அம்மன் வீதியுலாவருதலும் அதனைத் தொடர்ந்து திருவூஞ்சலும் இடம்பெறும். (எ-40)



# விட்டுக்கொடுப்புடன் வாழாவிட்டால் 30 வருட காலத் துன்பம் தொடரும்

## கல்முனை விகாராதிபதி தெரிவிப்பு

இந்தநாட்டிலே வாழும் எல்லோரும் பெரும்பான்மை, சிறுபான்மை என்று சிந்திக்காமல் சகலரும் சமத்துவமான வர்கள் என்று கருதி விட்டுக்கொடுப்புடன் வாழா விட்டால்- வாழ முடியா விட்டால்- 30 வருட காலங்கள் அனுபவித்த துன்பம் மேலும் தொடரும்.

-இவ்வாறு கல்முனை ஸ்ரீ சுபத்திராராம மகா விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விஸ்வகர்ம பொற்றொழிலாளர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளந்தண்டு வலி, பார்வைக் குறைபாடு நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மஹாஜன கல்லூரியில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மற்றவர்களுக்கு அன்பையும், ஆதரவையும், கண்ணியத்தையும் வழங்க நாம் மறப்போமாயின் கடந்த 30 வருடகால பகைமை உணர்வு இன்னமும் தொடர்ந்து நீடிக்கும். அதற்கு நாம் வாய்ப்பளித்து விடக்கூடாது. விட்டுக் கொடுப்புடன் வாழப் பழக வேண்டும். மற்றவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். நமது உன்னதமான அன்பை வெளிப்படுத்த வேண்டும். சிறுபான்மை பெரும்பான்மை என்று யாருமே சிந்திக்கக் கூடாது. இவ்வாறான நற்பண்புகளைநம் மத்தியில் வளர்ப்போமானால் சிறந்த மனிதர்களாக மாற முடியும்.

அரச அதிகாரிகள் கருணையுள்ளத்தோடு பணிபுரிய வேண்டும். இந்த நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். நமது பண்பாடுகளை, விழுமியங்களை மதத் தலைவர்கள் போதிப்பதிலும் பார்க்க வேறு யாரோ கூறுவதை மக்கள் நம்பக் கூடிய காலமாக இது மாறி விட்டது. இந்த நிலைமை மாற வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரி நாட்டில் நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சமாதானம், சமத்துவம், சக வாழ்வு போன்றவற்றை உருவாக்கப் பாடுபட வேண்டும் என்று அறை கூவல் விடுக்கின்றார். உண்மையில் அது சிறந்த அழைப்புத்தான். அதனை நாம் ஏற்றுக் கொண்டு சமாதானத்துக்காகப் பாடுபடுவோம். - என்றார். (ச)

## போதைப் பொருள் பாவனைக்கு எதிராக மட்டு. பாடசாலைகளில் விழிப்புணர்வு

'போதையற்ற சுகவாழ்வுடன் கூடிய நாடு' என்னும் தொனிப்பொருளின் கீழ் பல்வேறு போதை ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நகரப் பாடசாலைகளில் மாணவர்களின் காலை ஒன்றுகூடலின்போது, சுமார் 30 நிமிடங்கள் போதைப்பொருளால் ஏற்படும் விபரீதங்கள் பற்றி விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மட்டக்களப்பு விமோச்சனா மதுபானப் பாவனையாளர் புனர்வாழ்வு இல்லத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்விகா சகாதேவன் தெரிவித்தார்.

ஏற்கெனவே போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானோரை மீட்கும் வகையிலும், இனி மேலும் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகாமல் தடுக்கும் வகையிலும் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்தப் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால மாணவர் சமுதாயம் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வருவதைத் தடுக்கும் வகையிலேயே மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றன என மேலும் அவர் தெரிவித்தார். (ச)

## தோப்பூரில் குண்டு மீட்பு

மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தோப்பூர் 10 ஆம் வீட்டுத்திட்டப் பகுதியை அண்டி அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று திங்கட்கிழமை மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

காணி உரிமையாளர் நிலத்தைத் தோண்டும் போது, இந்த மோட்டார்க் குண்டு நிலத்தில் புதைந்து கிடந்ததை அவதானித்துள்ளார். இதனை அடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்நிலையில் வெடிக்காத நிலையில் இந்த மோட்டார் குண்டு மீட்கப் பட்டு, பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது (ச)

## கிழக்கு மாகாணத்தில் கிராமங்களுக்கு பஸ் சேவையை விஸ்தரிக்க ஏற்பாடு

திருகோணமலை,பெப்.07

கிழக்கு மாகாணத்தில் கிராமப்புறங்களுக்கான தனியார் பஸ் சேவைகள் இந்த வருடத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன என்று அந்த மாகாணத் தனியார் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சமந்த பி. அபேவிக்கிரம தெரிவித்தார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட ஆறு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. கிழக்கு மாகாண மக்களின் போக்குவரத்து நலன் கருதி முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டங்கள் விரைவில் செயற்படுத்தப்பட உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி காணாமல் போனவர்களைக் கண்டறிய நடவடிக்கை

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திக் காணாமல் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய மட்டக்களப்பிலுள்ள பெண்கள் குழு ஒன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்க அலுவலகங்களில் முறைப்பாடுகள் செய்தும் எண்ணற்ற ஆணைக்குழுவில் வாக்குமூலங்களைக் கொடுத்தும் எந்தவொரு பயனும் கிட்டாத நிலையில், புதிதாக நடைமுறைக்கு வந்துள்ள சட்டத்தைப் பயன்படுத்த மக்கள் தீர்மானித்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு கடந்த 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் மாவட்ட செயலகம், மாகாண மற்றும் மாவட்டத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றில் தமது உறவுகள் தொடர்பான விவரங்களைக் கோரி 15 பெண்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர். (ச)

## ரயில் மீது கல் வீச்சு



மட்டக்களப்பு,பெப்.07

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயில் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் ரயில் இயந்திரப் பகுதியிலுள்ள கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு புறப்படத் தயாராக இருந்த ரயில் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

## பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு

மட்டக்களப்பு,பெப்.07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட நால்வருக்கும் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராஜா முன்னிலையில் அவர்களை நேற்று திங்கட்கிழமை ஆஜர்படுத்திய போதே நீதிவான் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

## சுத்தமான குடிதண்ணீர் விநியோகம் ஏறாவூர்ப்பற்றில் ஆரம்பம்





ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட செங்கலடி கணபதிநகர் கிராமத்தில் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் முதற்கட்டமாக சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் மூன்றாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என பாம் பவுண்டேஷன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அருளானந்தம் சக்தி தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு செங்கலடி விவேகானந்தா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களிலும் சுமார் ஒரு லட்சம் பேருக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கி, அவர்களைச் சிறுநீரக நோயிலிருந்து காப்பதற்கான இந்தத் திட்டத்துக்காக 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி அளித்து இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யு.எஸ்.எய்ட் நிறுவனம் தெரிவித்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் மழை நீரைச் சேகரிப்பதற்கான தொட்டிகளை அமைத்தல், குழாய் மூலம் குடிதண்ணீரைப் பெறுவதற்கான வசதியை ஏற்படுத்துதல் மற்றும் வெள்ளம், வறட்சியால் ஏற்படும் பாதிப்புகளைச் சரிசெய்வதற்காக உள்ளூர் உட்கட்டமைப்புச் சீர்திருத்தம் செய்தல் போன்றவை உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச)

## மாடு திருடிய நால்வர் கைது

அம்பாறை,பெப்.07

சம்மாந்துறை நெய்னாகாட்டுப் பிரதேசத்தில் மாடு ஒன்றைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் நான்கு பேரை நேற்று திங்கட்கிழமை காலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

திருடிய மாட்டைக் கல்முனையிலுள்ள மாடு அறுக்கும் இடத்துக்குக் கொண்டு சென்றபோதே, இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் ஒருவர் தேடப்பட்டு வருகிறார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# பொறுப்புக்கூறல் விவகாரங்களில் மெதுவாக செயற்படுகிறது இலங்கை!

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் கவலை



கொழும்பு,பெப்.07
பொறுப்புக்கூறல் தொடர்பானவிவகாரங்களில்,இலங்கை மெதுவாகவே செயற்படுகிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன், கவலை வெளியிட்டுள்ளார்.

டாவோஸில் கடந்த மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககலந்து கொண்டிருந்தார்.

இந்த மாநாட்டின் பக்க நிகழ்வாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பான தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன.

இலங்கையின் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, ஜெனீவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத ஆரியசிங்க ஆகியோரும் பங்கேற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்துக் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பாகக், கலந்தாய்வு செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை வரவேற்கிறேன்.

அதேவேளை, பல்வேறு விடயங்களில், குறிப்பாகப் பொறுப்புக்கூறல் விடயங்களில் மெதுவான முன்னேற்றங்கள் மாத்திரமே ஏற்பட்டுள்ளமை குறித்த எனது கவலையை வெளியிட்டேன்.

இதுவும், கரிசனைக்குரிய ஏனைய விவகாரங்களும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் மார்ச் மாதம் நான் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் பிரதிபலிக்கும் என்றும் இலங்கைப் பிரதமருக்குத் தெரிவித்தேன் என்று அவர் கூறியுள்ளார்.

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாட்டுக்குக் கூட்டு எதிர்க்கட்சி ஆதரவு



கொழும்பு,பெப்.07
அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாட்டிற்கு ஆதரவளிக்கப்படும் என்று கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றோம் என்று கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் அண்மையில் கூட்டு எதிர்க்கட்சி பேச்சு நடத்தியிருந்தது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் சங்கத்துக்கு பூரண ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளோம்.


நாட்டின் சுகாதார துறையில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் நெருங்கிச்செயற்படவும் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

தகுதியற்ற மருத்துவர்களை சமூகத்தில் உருவாக்குவது நெருக்கடியான நிலையைத் தோற்றுவிக்கும்.

அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நிராகரிக்கப்படும் எந்தவொரு தனியார் கல்விக்கும் அனுமதியளிக்கக்கூடாது. இது தேசிய ரீதியில் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## ஆர்ப்பாட்டங்கள், கலகங்களை அடக்க சிறப்பு அதிரடிப்படையில் புதிய பிரிவு!




கொழும்பு,பெப்.07
இலங்கையில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்கள், கலகங்களை அடக்குவதற்காகச் சிறப்பு அதிரடிப்படையில், கலகம் அடக்கும் புதிய பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கண்ணீர்ப் புகைக்குண்டுகளைப் பயன்படுத்திக் கலகம் அடக்கும் நடவடிக்கைகளில், ஈடுபடுத்துவதற்காக இந்தச் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

கண்ணீர்ப் புகைக்குண்டுகள் மற்றும் வாயுக்களில் இருந்து, பாதுகாப்பளிக்கும் முகத்தை மூடிய கவசங்கள் மற்றும் கவச உடைகள் தாங்கியதாக இந்தப் புதிய படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக, கொழும்பில் ஜனாதிபதி செயலகம் முன்பாகக் கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கும் நடவடிக்கையில் இந்த புதிய படைப்பிரிவு ஈடுபடுத்தப்பட்டது. அதேவேளை கடந்த திங்கட்கிழமை காலிமுகத்திடலில் இடம்பெற்ற சுதந்திர நாள் அணிவகுப்பிலும் இந்தப் படைப்பிரிவு பங்கேற்றிருந்தது என்பதுகுறிப்பிடத்தக்கது. (க)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ரஞ்சன் ராமநாயக்க முறைப்பாடு!



கொழும்பு,பெப்.07
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு எதிராகவே இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த முறைப்பாட்டைத் தாக்கல் செய்துள்ளேன் என்று ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் தெரிவித் துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபயவால் வெற்றியீட்ட முடியாது என்கிறார் எஸ்.பி.

கொழும்பு,பெப்.07
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டமாட்டார் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹங்குராங்கெத்தப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியைத் தழுவுவார், பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றியீட்டுவார்.

கூட்டு எதிர்க்கட்சி தனித்து தேர்தலில் போட்டியிடும் என்ற பிரசாரங்களில் உண்மையில்லை. போட்டியிடப் போவதில்லை என்ற காரணத்தினால் மஹிந்த ராஜபக்ஷவின் கூட்டு எதிர்க்கட்சி தனித்துப் போட்டியிடும் என கூறி வருகின்றார்.

அமைச்சரவை மாற்றத்தின் போது எனக்கு எவ்வித புதிய பதவியும் தேவையில்லை, தற்போது வகிக்கும் பதவி போதுமானது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்துள்ளனர். அது குறித்து ஊடகங்களுக்கு தற்போதைக்குக் கருத்து வெளியிட முடியாது என்றும் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## சு.க.வின் அடித்தளம் பலமாக்கப்பட்டுள்ளது

எதிர்காலத்தை நோக்கிய வெற்றிப் பாதைக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடித்தளம் மிகவும் பலமாக்கப்பட்டுள்ளது என்று விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு கட்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் கட்சியை விட்டு விலகியிருக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரும் சேர்ந்தே செயற்பட வேண்டும்.

# பஸ் நிலையப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரச அதிபரிடம் 3 யோசனைகள் முன்வைப்பு

## வட மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதனால்

வவுனியா, பெப்.07

வவுனியாவில் தனியார் பஸ் சேவையாளர்களுக்கும், இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா அரச அதிபருக்கு மூன்று யோசனைகளை முன் வைத்துள்ளார்.

இரு தரப்பினரும் ஒரே இடத்தில் இருந்து சேவையாற்ற முடியாது என்பது தெளிவாகியிருப்பதால், வவுனியா நகரில் பழைய இடத்தில் இருந்தே இலங்கை போக்கு வரத்துச் சபையினரை சேவையில் ஈடுபட அனுமதிப்பதுடன், பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உள்ள காணி ஒன்றில் தனியார் பஸ்களுக்கான நிலையத்தை அமைத்து, புதிதாக யாழ்.வீதியில் அமைக்கப் பட்டுள்ள புதிய பஸ் நிலையக் கட்டடத் தொகுதியில் வவுனியாவுக்கான பொருளாதார மையத்தைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அவர் அந்த யோசனைகளில் தெரிவித்திருக்கின்றார்.

தமது யோசனைகளை உள்ளடக்கியதாக லிங்கநாதன் வவுனியா அரசாங்க அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;

இலங்கை போக்குவரத்துச் சபையினர் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம் தொடர்பிலான பிரச்சினைக்கு நீண்டகால அல்லது நிரந்தரத் தீர்வுக்கான யோசனைகளை இந்தப் பிரச்சினை தொடர்பான சந்திப்பில் தெரிவித்திருந்தேன்.



தற்போது இருக்கின்ற நிலைமைகளின் அடிப்படையில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையினரை ஒரே தளத்தில் இருந்து சேவையில் ஈடுபடுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே, இலங்கை போக்குவரத்துச் சபையினர் முன்னர் பயன்படுத்தி வந்த வவுனியா நகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பழைய பஸ் நிலையத்தை இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு வழங்க வேண்டும்.

தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு வவுனியா நகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அங்காடி வியாபார நிலையம் காணப்படுகின்ற பகுதியை வழங்க வேண்டும்.

ஏற்கனவே மதகு வைத்த குளத்தில் (தேக்கவத்தையில்) 2 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தைத் தற்போது பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பஸ் நிலையத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நிரந்தரமான, நிலைத்து நிற்கக்கூடிய ஆக்கபூர்வமான உடனடி முடிவை மேற்கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்ளுகின்றேன்.- என்றுள்ளது. (எ)

### வட்டக்கச்சியில் கிராம அலுவலரின் காணியில் மிதிவெடி மீட்பு

கிளிநொச்சி - வட்டக்கச்சியில் உள்ள கிராம அலுவலரின் காணி யிலிருந்து மிதிவெடி ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி சில்வா வீதியில் அமைந்துள்ள கிராம அலுவலரின் காணி துப்புரவு செய்யும்போதே காணியிலிருந்த மிதிவெடி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இராமநாதபுரம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதையடுத்து அங்கு சென்ற அவர்கள் மிதிவெடியை மீட்டனர். பின்னர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று செயலிழக்கச் செய்ய ஏற்பாடாகி இருந்தது. அந்தக் காணியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு ஏழு வருடங்களாக கிராம அலுவலரின் குடும்பம் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அடைக்கப்பட்ட குளிர்பானத்துக்குள் இனங்காணமுடியாத கழிவுப்பொருள்!


## — வவுனியா நகரிலுள்ள தனியார் சுப்பர் மாக்கற் ஒன்றில் —

வவுனியா, பெப்.07

வவுனியா, பசார் வீதியில் உள்ள பிரபல தனியார் சுப்பர் மாக்கற் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட அடைக்கப்பட்ட குளிர் பானத்துக்குள் இனங் காணமுடியாத கழிவுப் பொருள் காணப்பட்டுள்ளது. அதையடுத்து, வவுனியா நகர சபையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்காக அந்தப் பிரபல தனியார் சுப்பர் மாக்கற் ஒன்றில் பிளாஸ்ரிக் கப்பில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களை ஒருவர் கொள்வனவு செய்துள்ளார். நிகழ்வின் போது அவை பரிமாறப்பட்டன. இதன்போது அதனைத் திறந்து பருகிய சிலர் குளிர்பானத்தின் அடிப் பகுதியில் கழிவுகள் இருந்தமையைக் கண்டுள்ளனர்.



அதையடுத்து அவர்கள் நிகழ்வு ஏற்பாட்டாளர்களிடம் இவ்விடயத்தைத் தெரியப்படுத்தியிருந்தனர். அதன்பின்னர் அவர்கள் வவுனியா நகர சபைச் செயலாளர் இ. தயாபரனின் கவனத்துக்குக் கொண்டு வந்தமையை அடுத்து, உடனடியாகவே அந்த சுப்பர் மாக்கற்றுக்குச் சென்ற வவுனியா நகரசபைச் செயலாளர் மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் பெட்டி ஒன்றில் பொதி செய்யப்பட்டிருந்த கப்பில் அடைக்கப்பட்ட குளிர்பானங்களைக் கைப் பற்றியுள்ளனர். மேலும், அந்த வர்த்தக நிலையத் துக்கு எதிராக வவுனியா நீதிமன் றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதே வேளை, அந்த வர்த்தக நிலையம் முன்னர் ஒரு தடவை 'சீல்' வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-100)

# புனித நாட்டு பயணத்தை ஆரம்பித்த மன்னார் மாவட்ட குருக்கள் 6 பேர்



மன்னார், பெப்.07

மன்னார் மறை மாவட்ட குருக்கள் ஆறு பேர் புனித நாட்டுக்கான திருப் பயணத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

அந்தவகையில், இஸ்ரேல், ஜெருசலேம் ஆகிய இடங்களுக்கு ஒருவார கால திருப்பயணத்தை இவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

மன்னார் மறை மாவட்ட பங்குகளைச் சேர்ந்த வண.பிதா சவுல் நாதன், வண.பிதா வசந்த குமார், வண.பிதா சுகன ராஜ், வண.பிதா சுரேஸ், வண.பிதா செல்வநாதன் மற்றும் வண .பிதா தமிழ் நேசன் ஆகிய 6 குருக்களுமே இவ்வாறு ஒரு வாரத்துக் கான திருப்பயணத்தை ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# செட்டிகுளம் மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைப்பு






வவுனியா, பெப்.07

வவுனியா செட்டிகுளம் பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

வவுனியா பாவற்குளம், சூடுவெந்தபுலவு மற்றும் மாங்குளம் ஆகிய பகுதி மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

இதற்கான அடிக்கல்லை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் நட்டார். அத்துடன் செட்டிகுளம், மாங்குளம் மற்றும் சூடுவெந்த புலவு ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தார். இவற்றுடன் செட்டிகுளம், மாங்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட உள்ளக வீதி ஒன்றையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

அமைச்சருடன் இந்த நிகழ்வில் பிரதி சுகாதார அமைச்சர் பைசர் காசிம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ-100)



# யாழ்ப்பாணத்துக்கு ஆறு உருவாக்கும் திட்டம் சாத்தியப்படுமா...?

"யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்காக' 2010இல் ஆசிய அபி விருத்தி வங்கியால் 130 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் வசதி மேற்கொள் எப் பட்டது. இத்திட்டத்துக்கான உள்ளூர்ச் செலவுகளுக்கான 26 மில்லியன் டொலர் நிதி சிறிலங்கா அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

யாழ்ப்பாண நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் 3 இலட்சம் மக்களுக்குப் பாதுகாப்பான குடி தண்ணீர் வசதியை வழங்குவதையும் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த 80,ஆயிரம் மக்களுக்கு சுகாதார வசதியை வழங்குவதையும் நோக்காகக் கொண்டே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்கான மூல நீரானது கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து பெற்றுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இரணைமடுக் குளத்தின் நீர் பளைக்கு அருகிலுள்ள சுத்திகரிப்பு நிலையத்துக்குப் பாய்ச்சப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வழங்கப்படுவதே இத்திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது.

ஆனால், இத்திட்டத்தை கிளிநொச்சியைச் சேர்ந்த விவசாயிகள் எதிர்த்து ஆர்ப் பாட்டம் மேற்கொண்டனர். இரணைமடுக் குளத்திலிருந்து பெறப்படும் நீர் தமது சிறுபோக நெற்பயிர்ச் செய்கையின் 30 சதவீதத்தை மேற்கொள்வதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும் இந்த நீரை யாழ்ப்பாணத்துக்கும் வழங்கினால் இதனால் தாம் பாதிக்கப்படுவோம் எனவும் கிளிநொச்சி வாழ் விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில், இத்திட்டத்துக்கான மூல நீர் இரணைமடுக்குளத்திலிருந்து பெறுவது என்பது கைவிடப்பட்டு இதற்குப் பதிலாக மருதங்கேணிக்கு அருகிலுள்ள தாளையடி கடற்கரையில் அமைக்கப்படும் 'ஊடுகசிவு உவர் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து' நீரைப் பெற்றுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

உவர்நீரைக் குடி தண்ணீர்த் தேவைக்காக மாற்றும் சுத்திகரிப்பு நிலையம் நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றர் நீரைக் கொள்திறனாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்துக்காக ஒப்புதல் அளிக்கப் பட்ட கடன் 94 மில்லியன் டொலராகக் குறைக்கப்பட்டுள்ளது.

எனினும், உவர்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் அதிக செலவீனம் ஏற்படுகிறது. ஆகவே, இத்திட்டத்திற்கான மேலதிக கடனாக 120 மில்லியன் டொலர் நிதி ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுவதாக உத்தர வாதமளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தாளையடியில் நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றரைக் கொள்திறனாகக் கொண்ட உவர்நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கும் அதனை இயக்குவதற்குமான இத்திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப் பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவுத் திகதி மே 02, 2017 ஆகும்.

### தொண்டைமானாறு தடுப்பணை

இவ்வகையான சுத்திகரிப்பு ஆலைகளை அமைப்பதற்காகப் பயன் படுத்தப்படும் வெளிப்புற வளைந்து கொடுக்கும் விளிம்புகளைக் கட்டுவதற்கான செலவு அதிகம் என்பதாலேயே இந்த ஆலைகளுக்கான செலவும் அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது கடலிலிருந்து இந்த ஆலைக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு உயர் அழுத்தம் கொண்ட நீர்ப்பம்பிகள் தேவையாக உள்ளன.

இந்தப் பம்பிகள் இவ்வாறான மெல்லிய வளைந்து கொடுக்கும் விளிம்புகளின் ஊடாகவே நீரைப் பாய்ச்சுகின்றன. இதற்கு அதிக மின்சாரம் தேவைப்படுகிறது. நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றர் நீரைப் பாய்ச்சும் இவ்வாறான சுத்திகரிப்பு ஆலை கிட்டத்தட்ட ஐந்து தொடக்கம் ஆறு மெகாவற் மின்சாரத்தை நுகரும்.

சிறிலங்காவில் அமைக்கத் தகுந்த விதத்தில், இந்தியாவின் சென்னையில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லீற்றர் உவர் நீர்ச் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் சிறிலங்காவைப் போன்றே மின்சாரச் செலவீனத்திற்கான கொடுப்பனவு பெறப்படுகிறது. இந்த ஆலை 2010இல் உருவாக்கப்பட்டு சென்னை நீர் சுத்திகரிப்பு நிறுவனத்தால் இயக்கப் படுகிறது.

இந்த நிறுவனம் இங்கு சுத்திகரிக்கப்படும் நீரைச் சென்னை நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சபைக்கு விற்பனை செய்கிறது. இவ்வாறு விற்கப்படும் நீரின் விலை 2005இல் லீற்றர் ஒன்று 1.03 டொலர் என சமரசம் செய்யப்பட்டது.

இதேபோன்றே தாளையடியில் ஆலை ஒன்று நிறுவப்பட்டால் அதற்கான செலவீனமும் இதைவிட அதிகமாகக் காணப்படும். சென்னை மீஞ்சூர் நீர்ச் சுத்திகரிப்பு ஆலையில் 100 மில்லியன் லீற்றர் நீர் சுத்திகரிக்கப்படும் அதே வேளையில் தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள தாளையடி நீர்ச் சுத்திகரிப்பு ஆலையில் நாளொன்றுக்கு 24 மில்லியன் டொலர் நீர் மட்டுமே சுத்திகரிக்கப்படும் என்பதால் சென்னையை விட இதற்கான செலவு அதிகமாகவே காணப் படும். அண்ணளவாக தாளையடியில் உவர்நீர் சுத்திகரிக்கப்பட்டால் ஒரு லீற்றருக்கு 1.20 டொலர் செலவீனம் ஏற்படும்.

### யாழ்ப்பாணத்திற்கான ஆறு:

இந்நிலையில் 'யாழ்ப்பாணத்துக்கான ஆறு ஒன்றை உருவாக்கும் திட்டம்' (A River for Jaffna) ஒன்று இதற்கான மாற்றுத் திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவீனமும் குறைவாகவே காணப்படுகிறது. இதற்கான திட்டம் உள்ளூர் பொறியியலாளர்களால் வரையப்பட்டுள்ளது. இதற்கான மூலதனச் செலவு உவர்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைக்கான செலவி லிருந்து பத்தில் ஒரு பங்கு குறைவானதாகும். இத்திட்டத்துக்கு நீர் பாய்ச்சல் தேவையில்லை என்பதால் இதற்கான பராமரிப்புச் செலவு குறைவாகக் காணப்படும்.

இத்திட்டமானது 50 ஆண்டுகளுக்கு முன்னர் பரிந்துரைக்கப்பட்டது. இதற்கான பணிகள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இது பகுதியளவில் நிறைவுசெய்யப்பட்டது. யாழ் குடாநாட்டின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நிலத்தடி நீர்த் தேக்கத்தைப் பயன்படுத்திச் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்காகும்.

### யாழ்ப்பாண ஆறு திட்டம்

இதன் மூலம் யாழ்ப்பாணக் கிணறுகளிலுள்ள உவர்த் தன்மையைக் குறைப்பதுடன் உவர்த்தன்மையால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மீண்டும் விவசாயப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தலாகும். இத்திட்டத்தின் மூலம் தற்போது உவர்த்தன்மையைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தின் 30 சதவீதமான கிணறுகளைக் குடிப்பதற் அந்த நீரைப் பெற்றுக்கொள்வதற்கேற்ப மாற்ற முடியும். இத்திட்டம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை யாவன:

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உவர்நீர் கலப்பதைத் தடுப்பதற்காக தொண்டைமானாறு அணையை மீளவும் நிர்மாணித்தல். இதன்மூலம் வடமராட்சிக் கடல்நீரேரியை நன்னீர் நீரேரியாக மாற்ற முடியும்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உவர்நீர் கலப்பதைத் தடுப்பதற்காக அரியாலையில் புதிய அணை ஒன்றை நிர்மாணித்தல். இதன்மூலம் உப்பாறு கடல்நீரேரியைச் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நீரேரியாக மாற்றமுடியும்.

ஆனையிறவு வீதி மற்றும் தொடருந்து தண்டவாளப் பாலங்களின் கீழாக உள்ள துளைகளைத் தடைசெய்து ஆனையிறவு கடல்நீரேரியின் கிழக்குப் புறமுனையிலுள்ள சுண்டிக்குளத்தில் புதிய அணை மற்றும் வடிகாலைக் கட்டுதல். இதன் மூலம் ஆனையிறவு கடல்நீரேரியை குடி தண்ணீரைப் பெறக்கூடிய நீரேரியாக மாற்றமுடியும்.

ஆனையிறவுக் கடல்நீரேரி, வடமராட்சி கடல்நீரேரி மற்றும் உப்பாறுக் கடல்நீரேரி ஆகிய மூன்று கடல்நீரேரிகளின் நீரையும் கொண்டு செல்வதற்காக நான்கு கிலோ மீற்றர் நீளமான புதியதொரு முள்ளியான் இணைப்புக் கால்வாய் ஒன்றை உருவாக்குதல்.

யாழ்ப்பாணத்திற்கான ஆறு என்கின்ற இத்திட்டத்தை முற்றுமுழுதாக நிறைவு செய்வதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இதனை அடைந்து கொள்ள முடியவில்லை.

எனினும், ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொண்டைமானாறு அணைக் கட்டைப் புனரமைப்பதற்காகவும் அரியாலை அணைக்கட்டை நிர்மாணிப் பதற்காகவும் நிதி வழங்கப்பட்டது. இவ்விரு அணைக்கட்டுக்களுக்குமான பணிகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வடமராட்சி மற்றும் உப்பாறு நீரேரிகள் நன்னீரைக் கொண்டுள்ளன. ஆனாலும் ஆனையிறவுக் கடல் நீரேரி தற்போதும் உவர்நீர்க் கடல் நீரேரியாகவே காணப்படுகிறது.

நாடு முழுவதிலும் தேசிய நீர்ப் பயன்பாட்டு பாரிய திட்டம் ஒன்றின் கீழ் 30 நீர்த் திட்டங்களை மேற்கொள்ளுமாறு ஆஸ்திரேலிய பொறியியலாளர்களிடம் கோரப்பட்டுள்ளது. அடுத்த இருபது ஆண்டுகளில் இத்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட வேண்டும். இத்திட்டத்தில் 'யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத்' திட்டம் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக் கூற்று ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு 1142 மில்லியன் ரூபாய்கள் அல்லது 9.4 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

### அரியாலை தடுப்பணை

யாழ்ப்பாணத்துக்கு நாளொன்று 25 மில்லியன் லீற்றர் நீர் தேவை எனவும் இது பரிந்துரைக்கப்பட்ட தாளையடி சுத்திகரிப்பு நிலை யத்தில் சுத்திகரிக்கப்படும் என வரையறுக்கப்பட்ட 24 மில்லியன் லீற்றர் நீரை விட அதிகமாகக் காணப் படுவதாகவும் 2006 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட யாழ்ப்பாணம்- கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தின் ஆசிய அபி விருத்தி வங்கியின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மில்லியன் லீற்றரைக் கொள்திறனாகக் கொண்ட நீர்ச் சேகரிப்புக் கிணறுகள் பியகம, ஹொரண, கொஸ்கம போன்ற பல இடங்களில் காணப்படுகின்றன. நாளொன்றுக்கு 10 மில்லியன் லீற்றர் நீரைச் சேகரித்து வைக்கக்கூடிய கிணறு ஒன்றை காத்தான் குடியில் அமைப்பதற்கான திட்டம் ஒன்றும் வரையப்பட்டுள்ளது.

இவ்வாறான நீர்சேகரிப்புக் கிணறுகள் தொடர்பான மேலதிக தகவல்களை 'வி.தர்மரத்தினம் மற்றும் டி.வி.கன்யோன்' ஆகியோரால் எழுதப்பட்ட நூலில் காணமுடியும். இந்த நூலில் சிறிலங்கா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள பின்ஜெலியில் காணப்படும் நீர்ச்சேகரிப்புக் கிணறுகள் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே இவ்வாறான நீர்ச் சேகரிப்புக் கிணறுகளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கும் போது உவர்நீர் சுத்திகரிப்பு ஆலைகளை விட இவற்றுக்கான செலவு குறைவாகவே காணப்படும் என்பதுடன் மக்களின் தேவைக்கேற்ப நீர் வழங்கப்படும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத் திட்டத்தை நிறைவு செய்வதற்கான மூல நீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இந்த நூலை எழுதிய ஆசிரியர் 2009இல் ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த மணிலாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். இதில் ஆனையிறவுக் கடல் நீரேரியிலிருந்து நீரைப் பெற்று இத்திட்டத்தை மேற்கொள்ள முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டது. இக் கடிதத்துக்கு ஜூலை மாதம் 2009இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்னாசியத் திணைக்களத்தின் நகர அபிவிருத்திப் பிரிவின் இயக்குநரால் எழுதப்பட்ட பதில் கடிதத்தில் 'நாங்கள் தங்களின் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம். அதாவது யாழ்ப் பாணத்திற்கான ஆற்றுத் திட்டம் அடிப்படையில் அங்கு வாழும் மக்களின் விவசாய மற்றும் நிலத்தடி நீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இத்திட்டம் மேலும் ஆராயப்பட வேண்டும்.' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாளையடி உவர் நீர் சுத்திகரிப்பு நிலையத் திட்டம் அமுல்படுத்தப்பட்டால் 'யாழ்ப்பாணத்திற்கான ஆறு' என்கின்ற திட்டம் நடைமுறைப் படுத்தப்படமாட்டாது என்பதே உண்மையாகும். ஆண்டின் சில மாதங்களில் ஆனையிறவுக் கடல்நீரேரிக்குள் கனகராயன் ஆற்றிலிருந்து சுத்தமான நீர் பெறப்பட்டு அங்கிருந்து சுண்டிக்குளம் கடலுக்குள் இந்த நீர் பாயும்.

அதேவேளையில் இதற்கு ஒரு சில கிலோமீற்றர் இடைவெளியிலுள்ள தாளையடியில் அதிக செலவில் உவர்நீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு அதற்கான பராமரிப்புச் செலவும் அதிகமாக உள்ள இத்திட்டம் அமுல் படுத்தப்படும்.

வடக்கு மாகாண சபையின் வடக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஒன்றுகூடல் ஜனவரி 28--30, 2017 வரை இடம்பெற்ற நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக இதில் பேசப்பட்டிருக்கும் என நம்பப்படுகிறது.




பொன்.வேணு கிருஷ்ணா

### ட்ரம்ப் நிர்வாகத்தைப் பாராட்டும் சவுதி அமைச்சர்

சவுதி அரேபிய அரசு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்புடன் நெருக்கமாக இணைந்து செயற்படும் என்று சவுதி அரேபிய எண்ணெய் வளத்துறை அமைச்சர், காலித் அல்-ஃபாலி கூறியிருக்கிறார்.

பி.பி.சியிடம் பேசிய சவுதி அமைச்சர் அல்-ஃபாலி, ட்ரம்ப் நிர்வாகம் புதைபடிவ எரிபொருள்களுக்குத் தரும் ஆதரவைப் பாராட்டினார்.

பராக் ஒபாமாவின் ''யதார்த்தத்துக்கு மாறான கொள்கைகளைக்'' கைவிட்டு, எண்ணெய், எரிவாயு மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி என்ற ஒரு சமாந்தரமான கலவைகளை ஆதரிக்கும் கொள்கை அமெரிக்க மற்றும் சவுதி அரேபிய பொருளாதரங்களைப் பலப் படுத்தும் என்று அல்-ஃபாலி கூறினார்.

இதன் மூலம் அமெரிக்காவில் மேலும் கூடுதலான சவுதி அரேபிய முதலீட்டுக்கு வழி பிறக்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா அதன் அளவில் எண்ணெய் மற்றும் பாறை எரிவாயு சேமிப்புகளை மேலும் உருவாக்கிக் கொள்வதில் சவுதி அரேபியாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார் அமைச்சர் அல்-ஃபாலி.

இரு நாடுகளும் ஒரே பொருளாதார இலக்கையே கொண்டிருக்கின்றன என்று கூறிய அமைச்சர், பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள இரு நாடுகளும் ஒன்றிணைந்து உழைக்கும் என்றார்.

### பாதி உரையாடலுடன் தொலைபேசி அழைப்பைத் துண்டித்த ட்ரம்ப்... பதறிய ஆஸி. பிரதமர்...!

ஆஸ்திரேலிய பிரதமருடன் தொலைபேசியில் உரையாடிய அமெரிக்க அதிபர் டொனால்ட்ட்ரம்ப், இணைப்பை பாதியிலேயே துண்டித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் 45 ஆவது அதிபராக டொனல்ட் ட்ரம்ப் அண்மையில் பதவியேற்றுக் கொண்டார். இதையடுத்து உலக நாடுகளின் தலைவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி வருகிறார் ட்ரம்ப். அந்த வகையில், ஆஸ்திரேலிய பிரதமர், மால்கம் டர்ன்புல்லிடம் ட்ரம்ப் தொலைபேசியில் பேசியுள்ளார். அப்போது ஆஸ்திரேலியாவிடம் தஞ்சம் புகுந்த சிரியா உட்பட மேற்காசிய நாட்டு அகதிகளில் 1,250 பேரை அமெரிக்காவுக்கு அனுப்பப்பட இருந்தமை பற்றி பேசியதாக தெரிகிறது. மேலும் அகதிகளை ஏற்பது குறித்து விளக்கம் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், அகதிகளை ஏற்பது இன்னொரு பாஸ்டன் குண்டுவெடிப்பு பயங்கரவாதிகளை நாட்டுக்குள் அனுமதிப்பதற்குச் சமம் என்று ஆவேசமாக கூறினார் எனத் தெரிகிறது. இதனைத் தொடர்ந்து ஆவேசமாக சில நிமிடங்கள் பேசிய ட்ரம்ப், 25 ஆவது நிமிடத்தில் தொலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டார். இதனால் ஆஸ்திரேலிய பிரதமர் அதிர்ச்சியில் உறைந்து போனார் என வாஷிங்டன் போஸ்ட் இதழ் செய்தியில் கூறப்பட்டுள்ளது

### இது வரை நடத்திய தொலைபேசி உரையாடல்களிலேயே இதுதான் மோசமானது : ட்ரம்ப்


அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல் ஆகிய இருவருக்குமிடையே நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடல் அகதிகள் மறுவாழ்வு ஒப்பந்தம் ஒன்றை கேள்விக் குள்ளாக்கியுள்ளது.


http://www.bbc.com

Trump's Australian row: Is the US a liability for Australia?

The airtight alliance between America and Australia took a bumpy turn on Wednesday after a "hostile and charged" phone conversation was leaked between US President Donald Trump and his Australian counterpart, Malcolm Turnbull, in which the former reportedly called it his "worst call by far" with a foreign leader. Mr Trump reportedly lambasted Mr Turnbull over a deal inked by the Obama administration to resettle up to 1,250 asylum seekers in the US. Both leaders played down the encounter, but the leak underscored a longstanding debate about whether Australia relies too much on its northern ally in matters of foreign policy and security. For a country that is so closely aligned to the US, which bolsters its security, and so geographically important to China, which underpins its prosperity, the balance is tricky.







Mr Trump's phone call with Prime Minister Turnbull was described as "hostile and charged"

http://www.bbc.com/


Trump's telephone un-diplomacy

The president told Australia's leader that an agreement the Obama administration had negotiated to admit entry of more than a thousand refugees currently detained in Australia was "the worst deal ever" and described his conversation with Mr Turnbull as the "worst call by far" among those he had conducted with world leaders that day.

உலகத் தலைவர்களுடன் ட்ரம்ப் இது வரை நடத்திய தொலைபேசி உரையாடல்களிலேயே இது தான் மோசமான உரையாடல் என ட்ரம்ப் தெரிவித்தார் என வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய தடுப்பு முகாம்களில் இருந்து 1200 பேருக்கும் மேலானோரை அமெரிக்காவுக்கு அனுப்ப முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் நிர்வாகத்துடன் தாங்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்துக்கு ட்ரம்ப் மரியாதை தர வேண்டுமென உத்தரவாதம் அளிக்குமாறு ஆஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல் கேட்டுக் கொண்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

பெரும்பாலும் ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் இருந்து வந்த அகதிகளை ஏற்றுக்




கொள்ள சர்ச்சைக்குரிய முறையில் மறுத்து விட்ட ஆஸ்திரேலியா, அவர்களை அதற்குப் பதிலாக பசுபிக் நாடுகளான நாரூ, பப்புவா நியூ கினியா தடுப்புக் காவல் மையங்களில் வைத்திருக்கிறது.

### ட்ரம்பின் நிர்வாக ஆணைக்கு நாடு முழுவதும் தற்காலிக தடை

பெரும்பாலும் முஸ்லிம்கள் வாழும் 7 நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தடை செய்கின்ற அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாக ஆணைக்கு, சியாட்டல் நீதிபதி ஒருவர் அமெரிக்கா முழுவதும் தற்காலிக்த் தடை விதித்திருக்கிறார், (A US judge in Seattle has issued a temporary nationwide block on President Donald Trump's ban on travellers from seven mainly Muslim nations.)

ட்ரம்பின் நிர்வாக ஆணைக்கு எதிரான வழக்கை முதலில் வாஷிங்டன் மாகாணம் தொடுத்தது.

ட்ரம்பின் நிர்வாக ஆணைக்கு சவால் விடுப்பதற்கு அமெரிக்க மாகாணங்களுக்கு சட்ட முகாந்திரம் இல்லை என்று அரசு வழங்கறிஞர்கள் வாதிட்ட நிலையிலும், பெடரல் நீதிபதி ஜேம்ஸ் ரோபார்ட் (Federal Judge James Robart) இந்த நிர்வாக ஆணைக்கு எதிராகத் தீர்ப்பு அளித்திருக்கிறார்.



(கேள்வி தொடரும்...)



# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



50

## இந்திய – இலங்கை ஒப்பந்தம்

தமிழரின் பாரம்பரிய நிலத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் என்றும், தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசு காவல்துறை நிலையங்களைத் திறக்கக் கூடாது என்றும் பிரபாகரன் கேட்டுக்கொண்டார். அதற்கு ராஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களிடமிருந்து விடுதலைப் புலிகள் அமைப்பு வரி வசூலித்து வருவதாகச் சிறிலங்கா அரசு குற்றம் சுமத்துவதாகத் தெரிவித்த பிரதமர், இந்த வரி வசூலிப்பை நிறுத்த முடியாதா என வினவினார். மக்களிடமிருந்து பெறப்படும் வரிப் பணம் எமது அமைப்பின் நிர்வாகச் செலவுக்கே பயன்படுத்தப்படுவதாகக் கூறிய பிரபாகரன், அந்தத் தொகையை இந்திய அரசு எமக்குத்தர இணங்கினால் வரி அறவிடுவதைக் கைவிடலாம் என்றார். விடுதலைப் புலிகளின் நிர்வாகச் செலவுக்காக மாதாந்தம் ஐம்பது இலட்சம் ரூபா (இந்திய நாணயமாக) வழங்குவதற்கு இணங்கினார் ராஜீவ். வரி வசூலிப்பை நிறுத்துவதாக வாக்களித்தார் பிரபாகரன்.

அடுத்தாக, விடுதலைப் புலிப் போராளிகளை நிராயுதபாணிகளாக்கும் சர்ச்சைக்குரிய விவகாரம் பற்றிப் பேசப்பட்டது. ''உங்கள் அமைப்பிடம் உள்ள எல்லா ஆயுதங்களையும் கையளிக்குமாறு நாம் கேட்கவில்லை. அத்துடன், உங்களது கெரில்லாப் படையணிகளையும் கலைத்துவிடுமாறும் நாம் சொல்லவில்லை. நல்லெண்ண சமிக்ஞையாக சிறு தொகை ஆயுதங்களைக் கையளித்தால் போதும். இந்திய – இலங்கை ஒப்பந்த விதிகளுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் செயற்படுகிறார்கள் என சிறிலங்கா அரசையும் அனைத்துலக சமூகத்தையும் நம்பவைக்கும் வகையில் இந்த ஆயுதக் கையளிப்பு நடைபெறுவது முக்கியம். தமிழ் மக்களுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்திய அமைதிப்படை வடக்கு, கிழக்கில் செயற்படும். அத்துடன், சிங்கள ஆயுதப்படைகள் போர் நிறுத்தம் பேணியவாறு முகாம்களுக்குள் முடங்கியிருக்கும். இந்தச் சூழ்நிலையில் உங்களுக்கு போராயுதங்கள் தேவைப்படமாட்டா அல்லவா?'' என்று கூறினார் ராஜீவ் காந்தி.

பிரபாகரன் பதிலளிக்கவில்லை. ஆழமாகச் சிந்தித்தபடி இருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்டார் பண்டுருட்டி ''எதற்காகக் கடுமையாக யோசிக்க வேண்டும். இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆயுதங்களில் பழுதடைந்த, பாவிக்கமுடியாத, துருப்பிடித்த ஆயுதங்கள் சிலவற்றைக் கையளித்தால் போச்சு'' – என்றார் இராமச்சந்திரன்.

''இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொண்டவை எல்லாமே பழுதடைந்த, பாவிக்கமுடியாத, துருப்பிடித்த ஆயுதங்கள்தான்.'' – என்று கிண்டலாகப் பதிலளித்தார் பிரபாகரன்.

''பரவாயில்லையே, அந்தப் பழுதடைந்த ஆயுதங்களில் சிலவற்றைக் கொடுத்து விடுங்கள். பின்பு தேவை ஏற்படும் போது இந்திய அரசிடமிருந்து புதிய ஆயுதங்களைக் கேட்டுவாங்கலாம்'' – என்றார் அமைச்சர்.

தமிழ்மொழியில் நிகழ்ந்த இந்த சுவையான உரையாடலின் அர்த்தத்தை அறிய விரும்பினார் ராஜீவ். அதனை அப்படியே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினார் பண்டுருட்டி. அதை ஆமோதித்தபடி புன்முறுவலுடன் தலையசைத்தார் பிரதமர்.

அப்பொழுது அதிகாலை இரண்டு மணி இருக்கும். விடுதலைப் புலிகளின் தலைவருடன் ஏதோ ஒரு சுமுகமான இணக்கப்பாட்டுக்கு வந்தமைபோல மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டார் ராஜீவ் காந்தி. அன்று காலை ஒன்பது மணியளவில் அவர் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்பட ஏற்பாடாகியிருந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட வேண்டும். இந்தியப் பிரதமரிடம் எவ்விதமான சோர்வோ, களைப்போ தென்படவில்லை. ஏதோ ஒரு சாதனை ஈட்டியமைபோலத் தெம்பாகக் காணப்பட்டார். பண்டுருட்டி இராமச்சந்திரனுக்குப் பரமதிருப்தி. ஏதோ ஒரு யோசனையில் மூழ்கியிருந்தார் பிரபாகரன். அவரது கண்களில் ஏமாற்றமும் சோகமும் தெரிந்தது. சந்திப்பு முடிவடையும் கட்டத்துக்கு வந்தது. அப்பொழுது நான் அமைச்சர் பண்டுருட்டியிடம் கேட்டேன். ''ராஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் எனப் பல முக்கிய விடயங்கள் இங்கு பேசப்பட்டன. பிரதமர் அவர்களும் பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார். இதனையெல்லாம் எழுத்தில் வரைந்து இரு தலைவர்களிடமிருந்து கைச்சாத்துப் பெற்றால் என்ன? அது இந்த இரகசிய உடன்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் அல்லவா? என்றேன்.

எனது யோசனை பண்டுருட்டி இராமச்சந்திரனை ஆட்டம் காணவைத்தது. ஒரு கணத்தில் அவரது முகத்தில் இருந்த மகிழ்ச்சி எல்லாம் மறைந்து போனது. சிறிது நேரம் யோசித்தார். ''மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களில் நாம் இணக்கப்பாடு கண்டோம். கறுப்புப் பணமாக மாதாந்தம் உங்களுக்குக் கப்பம் வழங்குவதிலிருந்து ஆயுதக் கையளிப்பிலும் ஒளிவு மறைவாக உடன்பாடு செய்திருக்கிறோம். இந்த விடயங்கள் அம்பலமானால் அது இந்தியாவிலும் இலங்கையிலும் பெரியதோர் அரசியல் சூறாவளியை உண்டுபண்ணும் அல்லவா? எமது பிரதமரில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? இது ஒரு Gentlemen Agreement இரு உத்தமமான மனிதர்களினால் எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கட்டுமே'' என்றார் அமைச்சர் பண்டுருட்டி. தான் கூறியமையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ராஜீவ் காந்திக்கு விளக்கினார்.

''நீங்கள் எதற்கும் கவலை கொள்ளத் தேவையில்லை. நான் கொடுத்த வாக்குறுதிகளை நான் நிச்சயமாக நிறைவேற்றி வைப்பேன். அமைச்சர் சொல்வது போன்று இது ஓர் எழுதப்படாத Gentlemen Agreement ஆக இருக்கட்டும்'' – என்றார் ராஜீவ் காந்தி. இந்த விடயத்தில் நாம் பிரதமருடன் முரண்பட விரும்பவில்லை. அத்தோடு, இந்த இரகசிய ஒப்பந்தத்தில் பிரபாகரனும் எவ்வித அக்கறை காட்டுகின்றமை போலவும் தெரியவில்லை. முடிவாக எமது தடுப்புக் காவல் பற்றி பிரதமரிடம் முறையிட்டோம். பிரபாகரன் மீதான தடுப்புக் காவலை அகற்றி, அவரை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு நான் ஒழுங்கு செய்வேன் என உறுதியளித்தார் ராஜீவ்.

ராஜீவ் காந்தியின் இல்லத்திலிருந்து அசோக் விடுதிக்கு நாம் போய்ச்சேர அதிகாலை மூன்று மணி ஆகிவிட்டது. ''அண்ணா, இருந்து பாருங்கோ, இந்த இரகசிய ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும் ஒன்றுமே நிறைவேறப்போவதில்லை. இதெல்லாம் ஓர் அரசியல் ஏமாற்றுவித்தை'' என்று விரக்தியுடன் தனது அறைக்குச் சென்றார் பிரபாகரன்.

சோர்ந்து களைத்து எனது அறைக்குள் சென்றபோது விழித்தபடி காத்திருந்த திலீபன் விடியும் வரை என்னைத் தூங்கவிடவில்லை. இந்தியப் பிரதமருடன் நடந்த கலந்துரையாடல் பற்றியும், ராஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் பற்றியும், திலீபனிடம் விவரமாகக் கூறினேன். எல்லாவற்றையும் மிகவும் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்த அவன், ''அண்ணா என்ன சொல்கிறார்?'' எனக் கேட்டான். ''பிரபாகரனுக்குத் திருப்தியில்லை. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்பதிலும் அவருக்கு நம்பிக்கை இல்லை.'' - என்றேன். சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, ''அண்ணன் நினைப்பதுதான் நடக்கும்'' என்றான் திலீபன். உண்மையில் அப்படித்தான் நடந்தது. ராஜீவ் - பிரபா ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக அரசும் நிறுவப்படவில்லை.

மறுநாள் காலை இந்தியப் பிரதமர் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார். பிற்பகல் நடைபெற்ற ஆடம்பர வைபவத்தின் போது ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனாவும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். எம் மீதான தடுப்புக் காவல் அகற்றப்பட்டமையால் நாம் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றோம். 1987 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2 ஆம் நாள் பிரபாகரனும், யோகரட்ணம் யோகியும் இந்திய இராணுவ விமானம் மூலம் யாழ்ப்பாணம் சென்றடைந்தனர்.



(தொடரும்...)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர் அனுமதிக்கான நேர்முகப்பரீட்சை ஆரம்பம்

கொழும்பு, பெப்.07

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சைகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.

இதுதொடர்பாக கல்வியியல் கல்லூரி பிரதம ஆணையாளர் கே.எம்.எச்.பண்டாரா தெரிவிக்கையில்:

பஸ்துன்ரட்ட மற்றும் மஹரகம ஆகிய பிரதேசங்களிலுள்ள கல்லூரிகளைத் தவிர நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.- என்றார்.

கல்வியாண்டுக்கு நான்காயிரத்து 69 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப் படுவர். 2014 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# தினசரி ராசி பலன் 07.02.2017

துர்முகி வருஷம் 2017ம் ஆண்டு தைத்திங்கள் 25 ஆம் நாள் ஏகாதசி பகல் 1.47 வரை. பின்துவாதசி. மிருகசீரிடம் பகல் 1.49 வரை. பின்திருவாதிரை. சித்த யோகம் பகல் 1.49 வரை. பின்அசுபயோகம். ராகுகாலம்: மாலை 3.20 முதல் 4.48 வரை. சுபநேரம்: பகல் 11.02 முதல் 12.31 வரை.

இன்று ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத வளர்பிறை ஏகாதசிதுவாதசி இருதிதிகள் சேர்ந்த தினமாகும்.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். நினைத்த காரியங்களைச் செயற்படுத்துவதில் தாமதமாகும்.

**ரிஷபம்:** இன்று உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரத்தில் ஏற்றுமதி மூலம் இரட்டிப்பு லாபம் உண்டாகும். உத்தியோகத்தில் விரும்பிய உயர்வுகள் கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று மகிழ்ச்சியான நாள். உறவினர்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.

**கடகம்:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். சிலர் தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வீடு தேடி அலைவார்கள்.

**சிம்மம்:** இன்று மேன்மையான நாள். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். உத்தியோகச் சிறப்புகள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**கன்னி:** இன்று விருத்தியான நாள். உத்தியோகத்தர்கள் பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்:** இன்று சுபீட்சமான நாள். உத்தியோகத்தில் உயர் பதவி, சம்பள உயர்வு என்பன கிடைக்கும். பிரிந்திருந்த உறவினர்கள் வலிய வருவார்கள்.

**விருச்சிகம்:** இன்று யோசனையான நாள். தன வரவு குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். வீண்சந்தேகம், அலைச்சல் உண்டாகும்.

**தனுசு:** இன்று இனிமையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். எதிர்பாராதபடி பதவி உயர்வுகள் கிடைக்கும். திருமண வாய்ப்புகள் கனிந்துவரும்.

**மகரம்:** இன்று யோகமான நாள். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் அனுசரணையால் உயர்வுகளைப் பெறுவார்கள்.

**கும்பம்:** இன்று இன்பமான நாள். வியாபாரம் நன்கு செழித்தோங்கும். வீட்டில் காணாமல்போன பொருள்கள் திரும்பக் கிடைக்கும். தடைப்பட்ட திருமணகாரியங்கள் நடந்தேறும்.

**மீனம்:** இன்று சலனம் மிகுந்தநாள். மனம் குழப்ப நிலையில் இருக்கும். புதிய தொழில் முயற்சி தோல்வியைத்தரும். வீண் அலைச்சல்களால் உடலும், மனமும் சோர்வடையும்.

விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இத்தினங்களில் சுபகருமங்கள் ஆரம்பிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

# நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசின் தலையீடு

## தேசிய சுதந்திர முன்னணி பேச்சாளர் முஸாமில் கூறுகிறார்

கொழும்பு, பெப்.07

நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசு தலையிடுவதாக சந்தேகம் தற்போது பரவலாக எழுந்துள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரான மொஹமட் முஸாமில் தெரிவித்துள்ளார்.



பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் 21 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்கள்.

கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்டபோது, நீதிபதி ஜி.எல். டொஸ்கியினால் அவர்கள் அனைவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸார் அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோரிக்கை விடுத்தும், மாணவர்கள் தொடர்பில் முறையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்ற பின்னர் தான் அவர்களுக்குப் பிணையும் கிடைக்கப்பட்டது.

ஆனால், இது விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தற்போது குறிப்பிட்டுள்ள கருத்துத் தான் எமக்கு சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

அதாவது, மாணவர்களை விடுவிக்க வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நீதித்துறைக்கு பணிப்பு விடுக்க அவருக்கு உள்ள அதிகாரம் தான் என்ன? மாணவர்களை விடுவிக்க வேண்டும் என இவரால் எப்படிக் கூறமுடியும்? அப்படி நீதித் துறைக்கு பணிக்கவில்லை எனில் அவர் நாட்டு மக்களை ஏமாற்றும் பொருட்டு பொய்யான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு நீதித்துறையின் சுயாதீனத்தில் நல்லாட்சி அரசு தலையிட்டு வருகின்றமை இதன்மூலம் தெளிவாகின்றது. இது சிறிய விடயமாகத் தெரிந்தாலும், பின்னணியில் பாரதூரமான கருத்தொன்று மறைந்து காணப்படுகின்றது.- என்றார். (எ)

# மின் பாவனையாளர்களுக்கு இலவசமாக மின்குமிழ்கள்

கொழும்பு, பெப்.07

இலங்கை மின்சாரசபை, பாவனையாளர்களுக்கு இலவசமாக எல்.ஈ.டி மின் குமிழ்களை வழங்க உள்ளது.

60 அலகுகளுக்குக் குறைவாக மின்சாரத்தை மாதாந்தம் பயன்படுத்துவோருக்கு இவ்வாறு எல்.ஈ.டி மின்குமிழ்கள் வழங்கப்பட உள்ளன.

இவ்வாறு வழங்கப்படும் மின் குமிழ்களுக்காகப் பாவனையாளர்களிடமிருந்து மாதாந்தக் கட்டணத்தின் ஊடாக பணம் அறவீடு செய்யப்படாது என்று மின்வலு எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். மின்குமிழ்களைப் பயன்படுத்துவதால் மாதாந்தம் சேமிக்கப்படும் மின்சாரத்தைக் கொண்டு மின்குமிழ்களுக்கான செலவுகள் ஈடு செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு மின்சார சபையால் வழங்கப்பட உள்ள எல்.ஈ.டி மின் குமிழ்களுக்கு மூன்றாண்டுகள் உத்தரவாதம் வழங்கப்பட உள்ளது.

மேலும் வறட்சியான காலநிலையின் போதும் மின்சாரத்தை தொடர்ச்சியாக மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார். (எ)

# தேங்காய் விலை 2 மாதங்களில் குறைவடையும்



கொழும்பு, பெப்.07

தேங்காய் விலை அடுத்து வரும் இரண்டு மாதங்களில் குறைவடையும் என்று தெங்கு அபிவிருத்திச் சபையின் தலைவர் கபில் யஹாந்தாவல தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தேங்காயின் விலை அதிகரித்தது.

இறக்குமதி செய்யப்படும் பாம் ஒயில் மீது விதிக்கப்பட்டுள்ள வரித்தொகையைக் குறைப்பதற்கு அமைச்சர் நவீன் திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் ஊடாக விலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டின் தெங்கு உற்பத்தியில் 40 வீதமான உற்பத்தி வீண் விரயம் செய்யப்படுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் எட்டுப் பேருக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு, பெப்.07

பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகக் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரிகள் 8 பேருக்குஇந்தவாரத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடமைகளுக்காக அவ்வப் போது, இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படும் அவர்கள், அந்தப் பதவிகளுக்குத் தகுதியானவர்கள் என்று, அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் மூலம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளனர். அதற்கமைய அவர்கள் எட்டு பேருக்கும் இந்த வாரத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# போதைப் பாக்குடன் கண்டியில் 7 பேர் கைது

கண்டி, பெப்.07


கண்டி, கலஹா - பட்டிகாமம் தோட்டத்தில் போதை ஏற்படுத்தும் பாக்கு வகையுடன் 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களை கலஹா பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது அவர்களிடம் இந்தப் பாக்கு வகை இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து 23.8 கிராம் போதைப் பாக்குகைப்பற்றப் பட்டுள்ளது.

தெல்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த இந்த சந்தேக நபர்கள் 15 மற்றும் 17 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட உள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)



# பிரிட்டன் தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையின் பரிசளிப்பு





தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஐக்கிய இராச்சியக் கிளையின் அதிதிறன், தமிழ்த் திறன் மாணவர்களின் பரிசளிப்பும் வளர்கதமிழ் மதிப்பளிப்பும் மிகப்பிரமாண்டமான முறையில் மூன்றாவது ஆண்டாக கடந்த மாதம் 22 ஆம் திகதி கரோ நகர பைரன் மண்டபத்தில் இடம் பெற்றது.

பேரவை மேலாளர் திருமதி நகுலேஸ்வரி அரியரத்தினம், கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஐக்கிய இராச்சிய கிளையின் பொறுப்பாளர் முருகுப்பிள்ளை ஞானவேல், கல்வி மேம்பாட்டுக் கிளையின் ஐக்கிய இராச்சியக் கிளையின் ஆசிரியர் பயிற்றுகைப் பொறுப்பாளர் திருமதி தங்கேஸ்வரி கங்காதரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வுகளைத் தொடக்கி வைத்தனர். அகவணக்கத்துடன் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஐக்கிய இராச்சியக் கிளையின் பொறுப்பாளர் முருகுப்பிள்ளை ஞானவேல் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை மேலாளர் திருமதி நகுலேஸ்வரி அரியரத்தினம் சிறப்புரையாற்றினார்.

14 நாடுகளில் 60 ஆயிரம் மாணவர்களுக்கு மேல் பின்பற்றும் வளர்கதமிழ் பாடநூல் பாடத்திட்டத்தை ஐக்கிய இராச்சியத்தில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையுடன் சேர்ந்து இயங்கும் 92 பள்ளிகளிலிருந்து ஆயிரம் வரையான மாணவர்கள் பரிசளிப்பு விழாவில் பரிசில்களைப் பெற்றிருந்தனர்.

இந்த விழாவில் முதன்மை நிகழ்வாக 2016 ஆம் ஆண்டு கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடத்தப்பட்ட அனைத்துலகத் தமிழ் மொழிப் பொதுத் தேர்வில் வளர்கதமிழ் 12 நிறைவு செய்த மாணவர்களுக்கான சிறப்பு மதிப்பளிப்பும் இடம்பெற்றது. புலம்பெயர் மண்ணில் அதுவும் ஐக்கிய இராச்சியத்தில் ஒரு மாணவர் எந்தத் தடங்கலும் இன்றி வளர்கதமிழ் 12 நிறைவு செய்வதென்பது மிகவும் கடினமான விடயம்.

பொதுவாக இங்கு தமிழ் மொழி கற்கும் பெரும்பாலான மாணவர்கள் 7 ஆம், 8 ஆம் வகுப்புகளுடன் தங்கள் தமிழ்மொழிக் கல்வியை இடைநிறுத்திக்கொள்கின்றனர். அத்தகைய மாணவர்கள் தங்கள் தமிழ் மொழிக் கல்வியைத் தொடர்ந்து கற்க வேண்டும் என்ற ஊக்கத்தைக் கொடுக்கும் விதமாக இந்த மதிப்பளிப்பு நடத்தப்பட்டது. (ஐ)








# இலங்கை அரசின் கோரமுகத்தை இனம் காட்டுவோம்

## பேர்லினில் துண்டுப் பிரசுர போராட்டம்

எமது வரலாற்றுத் தாயகத்தில் தமிழ் மக்கள் ஒரு தேசிய மக்கள் இனமாக நிம்மதியோடும், கௌரவத்தோடும் நம்மை நாமே ஆண்டு வாழ விரும்புகின்றோம் எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள் என்ற மிக எளிமையான அரசியல் அபிலாஷைகளை முன்வைக்கும் தமிழினத்துக்கும் தமிழர்களை அழித்தொழித்து தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துத் தமது சிங்கள பௌத்த பேரின வாத மேலாதிக்கத்தை இலங்கைத் தீவு முழுவதும் நிலை நிறுத்த முனையும் சிங்கள இனத்துக்குமான வேறுபாட்டின் ஆழத்தை வெளிப்படுத்தும் ஒற்றைப் புள்ளியாகவே இலங்கையின் சுதந்திர தினம் அமைந்துள்ளது என்னும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சியின் பெயரால் எமது தேசிய அபிலாஷைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன, எப்பாடுபட்டேனும் தமிழர்களை அழித்துத் தமிழர் தாயகத்தை கபளீகரம் அடையச் செய்து விடத் துடிக்கும் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முகத்திரையைக் கிழித்து நாம் வாழும் நாடுகளில் உள்ள வேற்றின மக்களுக்கு வெளிப்படுத்துவோம் என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தில் ஜேர்மன் தலைநகர் பேர்லினில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் தமது ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலையை மறைத்து அயலவர்களுக்காகக் களியாட்டம் செய்வது வழமை.

இந்த நிகழ்வுக்குச் செல்லும் வேற்றின மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, ''கவனம், உங்கள் அயலில் இனப்படுகொலையாளி'' எனும் கருத்துக்கு அமைய நூற்றுக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் இலங்கைத் தூதரகம் அமைந்துள்ள சுற்று வட்டாரத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# கனடாவில் 'அன்பு' அமைப்பு

கனேடியத் தமிழர்கள் மத்தியில் இடம்பெறும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வரவும், அதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டம் மற்றும் உளவியல் ஆலோசனைகளைப் பெற்றுத் தரும் நோக்கிலும் 'அன்பு' என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கனடாவில் வசித்து வரும் இலங்கையரான தர்ஷிகா இளங்கீரன் மற்றும் அவரது நண்பி ஜென்னி ஸ்டார்க் ஆகியோர் இணைந்தே இந்த அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது உலகெங்கும் இடம்பெறவே செய்கிறது. எனினும், தமிழ்ச் சமூகத்தில் இந்தப் பிரச்சினை ஒரு குடும்பப் பிரச்சினையாகவே பார்க்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் அதுபற்றி வெளியே முறையிட்டாலோ, தெரிவித்தாலோ குடும்ப கௌரவம் பாதிக்கப்பட்டு விடும் என்று தமிழர்கள் நம்புகிறார்கள்.

இதை வெளியே சொல்வதால் பாதிக்கப்பட்ட சிறுவர்/சிறுமிகளின் எதிர்காலம் பாழாகிவிடும் என்றும் பயப்படுகிறார்கள். இந்தத் தவறான எண்ணத்தைத் தகர்த்து, தமிழ்ச் சமூகத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தை வெளிக்கொண்டு வருவதன் மூலம், எதிர்காலத்தில் இது போன்ற குற்றச் செயல்களைக் குறைக்கும் எண்ணத்துடனேயே நாம் இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்று கூறுகிறார் தர்ஷிகா.

பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பது பற்றிக் குழந்தைகளுக்குப் புரியும்படி சொல்லத் தெரிந்த பெற்றோர் மிகச் சிலரே இருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் உடல் உறுப்புகளின் பெயர்களையோ, எந்தெந்த உறுப்புக்கள் துஷ்பிரயோகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியோ குழந்தைகளுக்குச் சொல்லித் தருவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க முடியும் என்கிறார் ஜென்னி!

**பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டம் மற்றும் உளவியல் ஆலோசனைகளையும் பெற்றுத்தரும் நோக்கிலும் 'அன்பு' என்ற அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.**



# சசிகலாவுக்கு இப்போது வந்துள்ள புதிய தலைவலி:

# சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு ஒரு வாரத்தில்!

புதுடில்லி, பெப்.07

ஜெயலலிதா, சசிகலா மீதான சொத்துக் குவிப்பு மேன்முறையீட்டு வழக்கில் ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் சசிகலாவுக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது என்று தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை முதல்வராக ஜெயலலிதா இருந்த போது, ஜெயலலிதா மற்றும் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாக 66.65 கோடி சொத்து சேர்த்தனர் என்று 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு வழக்குத் தொடுத்தது.

18 ஆண்டுகளாக நடைபெற்ற இவ்வழக்கில் 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி, ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேருக்கு, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி



பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கேல் டி குன்ஹா தீர்ப்பளித்தார்.

மேலும், ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபா அபராதமும் ஏனைய மூவருக்கும் தலா 10 கோடி ரூபா அபராதமும் விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.

பின்னர், நால்வர் சார்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்கு தொடரப்பட்டது.

மேன்முறையீட்டு வழக்கில் நால்வரையும் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி விடுதலை செய்தார்.

அவர் வழங்கிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

சொத்துக் குவிப்பு வழக்கில், ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 4 பேரும் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தனர் என்ற குற்றச்சாட்டை அரசு தரப்பு வழக்கறிஞர் நிரூபிக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழங்கப்பட்ட சாட்சியங்கள் ஏற்புடையனவாக உள்ளன. எனவே, ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரும் விடுவிக்கப்படுகின்றனர்.

மேலும், வருமானத்தைவிட 10 வீதத்துக்கும் அதிகமாக சொத்து சேர்க்கப்பட்டிருந்தால் அது குற்றமாகும். ஆனால், ஜெயலலிதா வருமானத்தை விட 8.12 வீதம் மட்டுமே கூடுதலாக சொத்து சேர்த்துள்ளார்.

இது அனுமதிக்கப்பட்ட அளவுதான். எனவே, ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டுகளுக்கும், அரசுத் தரப்பு ஆதாரங்களுக்கும் முரண்பாடு உள்ளது.

வருமான வரி தொடர்பான வாதத்தை கீழ் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. வங்கிக் கடன்களை கீழ் நீதி மன்றம் கணக்கில் கொள்ள வில்லை என்று கூறி நான்கு பேரை விடுதலை செய்ய உத்தரவிட்டதோடு, பெங்களூர் சிறப்பு நீதிமன்ற வழக்கையும் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்.

இதையடுத்து, கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பை எதிர்த்து வழக்கு நடைபெற்ற மாநிலம் என்ற வகையில் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துக்கொண்டு வந்தது.

இந்நிலையில், ஜெயலலிதா, சசிகலா மீதான சொத்துக் குவிப்பு மேன்முறையீட்டு வழக்கில் ஒரு வாரத்தில் தீர்ப்பு வழங்கப்படும் என்று நேற்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அ.தி.மு.க. சட்டப் பேரவைக் குழுத் தலைவராக கட்சியின் பொதுச் செயலாளராக வி.கே. சசிகலா நேற்று முன்தினம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து தமிழக முதல்வராக சசிகலா பதவி யேற்கும் நிகழ்ச்சி நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், உச்ச நீதிமன்றத்தின் செய்தி அ.தி.மு.கவினரிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கில் எனக்குப் பல்வேறு தரப்பில் இருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன என்று கர்நாடக அரசுத் தரப்பில் ஆஜரான சிறப்பு வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா எழுதியுள்ள தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜெயலலிதா எண்ணங்களுக்கு விரோதமான செயல் அரங்கேறியுள்ளது என்கிறார் ஸ்டாலின்

### ஆட்சியிலோ கட்சியிலோ எந்தப் பொறுப்பும் இல்லாதவர் சசிகலா

மக்கள் மற்றும் ஜெயலலிதாவின் எண்ணங்களுக்கு விரோதமாக ஒரு செயல் அரங்கேறியுள்ளது என்று தமிழகத்தின் எதிர்க் கட்சித் தலைவரும், தி.மு.க. செயல் தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்நாட்டு மக்கள் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்ட அ.தி.மு.கவை ஆளுங்கட்சியாகவும், தி.மு.கவை பலம்வாய்ந்த எதிர்க் கட்சியாகவும் தேர்ந்தெடுத்தனர். ஆளுங்கட்சியான அ.தி.மு.கவுக்கும், எதிர்க் கட்சியான தி.மு.கவுக்கும் 1.1 சதவீதம் வாக்குகள்தான் வித்தியாசமாக



இருந்தது. அந்த வகையில் தமிழ்நாட்டு மக்கள் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வாக்களித்தனர். ஆனால், மக்களின் எண்ணத்திற்கு விரோதமாக தற்போது ஒரு சம்பவம் அரங்கேறியுள்ளது.

இன்னும் சொல்ல வேண்டுமானால், முதல்வராக இருந்த ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் தண்டனை பெற்று சிறைக்குச் சென்றபோது, ஓ.பன்னீர் செல்வத்தைத்தான் முதல்வராக நியமித்தார்.

அதேபோல் ஜெயலலிதா நோய்வாய்ப்பட்டு சென்னை அப்பலோ மருத்துவமனையில் நீண்ட நாள்கள் இருக்கும் நிலை ஏற்பட்ட போதும் பன்னீர்செல்வம்தான் முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார்.

சசிகலாவுக்கு ஜெயலலிதா ஆட்சி பொறுப்பிலும் எந்த ஒரு பதவியையும் கொடுக்கவில்லை. கட்சியிலும் எந்த ஒரு பொறுப்பையும் வழங்கவில்லை.

ஆனால், இன்றைக்கு அதற்கு நேர்மாறாக மக்கள் எதிர்பார்ப்புக்கு எதிராக, மக்கள் விரோதச் செயலாக, ஜெயலலிதாவின் எண்ணத்திற்கு விரோதமான ஒரு சம்பவம் இன்று அரங்கேறியுள்ளது.

தி.மு.கவைப் பொறுத்தவரை இந்த மக்கள் விரோத செயலை ஜனநாயக அடிப்படையில் தேர்தலில் சந்திப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

## பெண்களைக் கவரும் திட்டங்களில் முதல் கையெழுத்திடுவார் சசிகலா!

சென்னை, பெப்.07

முதல்வராக பதவியேற்ற பின்னர் பெண்களைக் கவரும் திட்டங்கள் சிலவற்றில் முதலில் சசிகலா கையெழுத்திடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக, பெண்களைக் கவரும் வகையிலான திட்டங்கள் இயற்றப்படவுள்ளன.

தற்போது அதற்கான கோப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், முதல்வராகப் பொறுப் பேற்ற பின்னர் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அறிவித்த சில முக்கியத் திட்டங்களுக்கான கோப்புகளிலும் அவர் கையெழுத்திடவுள்ளார்.

## பன்னீர்செல்வத்தின் ராஜினாமா ஏற்பு

### தமிழக ஆளுநர் அறிவித்தார்

சென்னை, பெப்.07

தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ராஜினாமாவை ஆளுநர் வித்யாசாகர் ராவ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தனது பதவியை ராஜினாமாச் செய்கிறார் என்று 05.02.2017 இல் அனுப்பிய



கடிதம் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை ஓ.பன்னீர் செல்வம் முதல்வர் பொறுப்பில் தொடருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்களுக்காக அ.தி.மு.க. ஆட்சி செயல்படும் என்கிறார் அடுத்த முதல்வர் சசிகலா!

திருவாரூர், பெப்.07

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வழியில் மக்களுக்காக அ.தி.மு.க. ஆட்சி செயல்படும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலரும், சட்டப் பேரவைக் குழுத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவருமான வி.கே.சசிகலா கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது தாயாய், இதயமாய், தெய்வமாய் திகழும் ஜெயலலிதாவை வணங்குகிறேன்.

அவரது மறைவுக்குப் பின்னால் அ.தி.மு.கவில் விரிசல் ஏற்படாத எனக் கனவு கண்ட அரசியல் எதிரிகளின் எதிர்பார்ப்புகளை தூள் தூளாக நொறுக்கிக் காட்டிய அ.தி.மு.க



வினருக்கு இதயம் நிறைந்த நன்றிகள்.

ஜெயலலிதாவின் பிள்ளைகள் என்பதை, தருணங்கள் எப்படி இருந்தாலும், சூழ்நிலைகள் எப்படி வந்தாலும், நாம் நிரூபித்துக் காட்டி வருகிறோம்.


ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கட்சி என்றும் மக்களுக்காக உழைக்கும் என்ற ஜெயலலிதாவின் கனவை ஈடேற்ற, அ.தி.மு.கவினரின் கோரிக்கையை, வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் இருந்தது.

அதேபோன்று இப்போதும் கட்சியின் பொதுச்செயலாளராகவும், முதல்வராகவும் ஒருவரே இருக்க வேண்டும் என்பதை அனைவரும் வலியுறுத்தி வந்ததன் விளைவாக கோரிக்கையையும் ஏற்கிறேன்.

ஜெயலலிதாவின் கனவுகளை முழுமையாக நிறைவேற்றுவேன். அவரது வழியில் மக்களுக்காக இந்த ஆட்சி செயல்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆப்கனில் பனிச்சரிவு: இதுவரை 100 பேர் சாவு!

## ஏராளமானோர் பனிக்கட்டிகளுக்குள் சிக்கித் தவிப்பு





காபூல், பெப்.07

ஆப்கானிஸ்தானில் பனிச்சரிவில் சிக்கி இது வரை 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்; ஏராளமானோர் பனிக் கட்டிகளுக்குள் சிக்கித் தவிக்கின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் கடந்த 3 நாள்களாக கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதில் மிகவும் உள்ளடங்கிய பகுதியான நூரிஸ்தான் மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு தொடர்ந்து பனிச்சரிவுகள் ஏற்படுகின்றன. அதன் இடிபாடுகள் வீடுகளின் மீது சரிவடைகின்றன. இதனால் வீடுகள் பனிக் கட்டிக்குள் மூழ்கிக் கிடக்கின்றன. வீதிகளும் அடைபட்டுப் போக்கு வரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பர்க்மடல் மாவட்டத்தில் கிராமங்கள் முழுவதும் பனிக் கட்டிக்குள் மூழ்கிக் கிடக்கின்றன. இவை தவிர வடக்கு மற்றும் மத்திய ஆப்கானிஸ்தான் மாகாணங்கள் பனிச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன.

பனிச்சரிவில் சிக்கி இது வரை 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டனர். அவர்களில் 50 பேர் நூரிஸ்தான் மாகாணம் பர்க்மால் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

வடகிழக்கில் உள்ள படாக்ஷான் மாகாணத்தில் 8 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 3 பெண்கள், 2 குழந்தைகள் அடங்குவர். அவர்களது வீடு பனிக்கட்டிக்குள் சிக்கி அழிந்துவிட்டது.

இன்னும் ஏராளமானோர் பனிக்கட்டிகளுக்குள் சிக்கித் தவிக்கின்றனர் என்றும் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என் றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ)

## சீனாவில் மசாஜ் நிலையத்தில் தீ; 18 பேர் உடல் கருகிப் பலியாகினர்!

பீஜிங், பெப்.07

சீனாவில் ஷிஜியாங் மாகாணம் தியான்டைப் பகுதியில் உள்ள ஷுஸிங் டாக் என்ற இடத்தில் உள்ள மசாஜ் நிலையத்தில் நேற்று முன் தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 18 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

அந்த மசாஜ் நிலையத்தில் நேற்று முன் தினம் மாலை திடீரெனத் தீப்பிடித்தது. உடனே அங்கு பணியில் இருந்தவர்களும், வாடிக்கையாளர்களும் கண்ணாடி ஜன்னல்கள் வழியாக வெளியே குதித்துத் தப்பித் ஓடினர். எனினும் இந்தத் தீ விபத்தில் சிக்கி 18 பேர் உடல் கருகிப் பலியாகினர்; மேலும் 18 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

## ஆஸி. கத்தோலிக்கத் திருச்சபையால் குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம்

ஆஸ்திரேலியாவில் ஒரு முக்கிய விசாரணையில் அங்கு பல தசாப்தங்களாக ரோமன் கத்தோலிக்க திருச்சபையால் நடத்தப்பட்ட மிகப் பெரிய அளவிலான குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் தெரிய வந்துள்ளது.

பொது விசாரணையின் ஆரம்பத்தில், சுமார் 2 ஆயிரம் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

மேலும் அவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 4 ஆயிரத்து 500 பேர் என்றும் ரோயல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க மதக் குழுக்களைச் சேர்ந்த 20 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஆறு பேராயர்கள் உட்பட ஆஸ்திரேலியாவின் முக்கிய கத்தோலிக்க அதிகாரிகள், ஆணையகத்துக்கு ஆதாரங்களை வழங்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் அகதிகள் வருகைக்கு விதித்த தடையை எதிர்த்து ஜேர்மன் தலைநகர் பேர்லினில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.



## பணியில் இருக்கும் பொலிஸார் 'கமரா' பொருத்துவது கட்டாயம்

**இது ட்ரம்ப்பின் உத்தரவு**

அமெரிக்காவில் பணியில் இருக்கும் பொலிஸார் தங்கள் சீருடையுடன் இணைந்த கமரா பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்று நியூயோர்க் நகர பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப், பதவி ஏற்றமை முதல் பல்வேறு புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

இதன் ஒரு பகுதியாக அமெரிக்கப் பாதுகாப்புத் துறை மேம்படுத்தப்படும் என்று ட்ரம்ப் அறிவித்தார். மேலும், உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், அனைத்துக் காவல் நிலையங்களும் மேம்பட்ட தொழில் நுட்பத்துக்கு மாற்றும்படியும் அவர் கூறியிருந்தார். (எ)

# மத அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கும் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்த ட்ரம்ப் திட்டம்

வொஷிங்டன், பெப்.07


அமெரிக்காவில் மதத்தின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு ஏற்றவகையிலான, சட்ட மூலம் ஒன்றை நடைமுறைப் படுத்து வதற்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

மத அமைப்புகள், மதம் சார்ந்த அறக்கட்டளைகள், தேவாலயங்கள் என்பன தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்கு, அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அடிப்படை மதவாதம் நிறைந்த குறிப்பிட்ட சில கிறிஸ்தவ அமைப்புகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே, ட்ரம்ப் இந்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்தவுள்ளார் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த சட்ட வாக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், அமெரிக்காவில் மத உரிமை மற்றும் மதச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளார் எனவும், கூடிய விரை வில் அதற்கான தீர்வை ஏற்படுத்தவுள்ளார் எனவும் ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சட்ட வாக்கம் தொடர்பான முன் வரைபுகளின்படி, தனிநபர் மற்றும் நிறுவனங்கள் மதத்தின் அடிப்படையில் ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். மத அமைப்புகள் அரசியலில் ஈடுபடும் அனுமதி, ஒவ்வொரு மத அமைப்பினரும் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கலாம். அத்துடன் விருப்பத் துக்கேற்ப நிதியுதவிகளைச் செய்யலாம் எனும் அடிப்படையில் அமைந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மெக்ஸிக்கோ எல்லையில் சுவர், அகதிகள் மற்றும் குறிப்பிட்ட 7 நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள்,



அமெரிக்கா வருவதற்கு தடை என்று அடுத்தடுத்துச் சர்ச்சைகளை ஏற்படுத்திவரும் ட்ரம்ப், தற்போது 'மதச் சுதந்திரம்' எனும் அடிப்படையில் புதிய சட்டவாக்கத்தை நடைமுறைப் படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் சட்டவாக்கத்தின் மூலம் அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள, ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, மதவாதக் கொள்கைகள் புகுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தத் தரப்பினரால் நேரடியான குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளையும் தாண்டி, இந்த மதச் சார்பான சட்டவாக்கத்தை ஜனாதிபதி ட்ரம்ப், மிக விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ)

இரா.துரைரத்தினம்
ஊடகவியலாளர்



# இராசதுரையிடம் சம்பந்தன் மன்னிப்பு கோரவேண்டும்!

## பகிரங்க மடல்

பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மற்றும் உங்கள் நம்பிக்கைக்குரிய காளி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் ஆகியவற்றில் ஈடுபட்டிருக்கும் உங்களுக்கு இந்தக் கடிதத்தை வாசிக்க நேரம் கிடைக்கா விட்டாலும் நேரம் கிடைக்கும் போது இதை வாசிப்பீர்கள் என நம்புகிறேன்.

காரணங்கள் எதுவாக இருந்தாலும் இம்முறை நீங்கள் சிறிலங்காவின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாதமைக்கு முதல்கண் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் சிறிலங்காவின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும், ஜனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொள்ளும் விழாக்கள், கூட்டங்களில் முண்டியடித்துக்கொண்டு அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கும் காட்சிகளைப் பார்க்கும் போது 1977களில் தமிழ் மக்களின் தலைமையாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் கொள்கையையும் நீங்கள் உட்பட கடைப்பிடித்த கட்டுப்பாடுகளையும் எண்ணிப் பார்க்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் ஒருவர் சிறிலங்கா சுதந்திர தினவிழாவுக்குச் செல்லத்தான் வேணும், ஜனாதிபதி பிரதமர், அமைச்சர்களுடன் விழாக்களில் கலந்து கொள்ளத்தான் வேணும் என நீங்கள் நியாயம் கற்பிக்கலாம்.

ஆனால், உங்களுக்கு முதல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த உங்கள் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1977ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதிவரை 6 ஆண்டுகள் எதிர்கட்சித் தலைவராக இருந்தார். இந்த காலப்பகுதியில் ஒரு தடவை கூட சிறிலங்காவின் சுதந்திர தினவிழாவில் கலந்து கொண்டமை கிடையாது. சிறிலங்காவின் சுதந்திர தினத்துக்கு வாழ்த்துச் சொன்னமையும் கிடையாது. சிறிலங்காவின் சுதந்திர தினம் எங்களுக்கானது அல்ல என்பதை வெளிப்படையாக அமிர்தலிங்கம் தெரிவித்து வந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்னொரு விடயமும் உங்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும் என நினைக்கிறேன். அதை ஞாபகப்படுத்துவது இப்போது அவசியம் எனக் கருதுகிறேன். ஜனாதிபதியையும், பிரதமரையும் முண்டியடித்துக்கொண்டு வரவேற்று மாலை அணிவிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதை அறிந்து கொள்ள வேண்டும்.

1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்தவுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு தீர்மானத்தை எடுத்திருந்ததை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானம் எடுத்திருந்தீர்கள். அந்த தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடைப்பிடித்து வந்தனர்.

அந்த வேளையில் 1978 நவம்பர் மாத 27ஆம் திகதி மட்டக்களப்பில் வீசிய சூறாவளியால் அம்மாவட்டத்தில் ஏற்பட்ட அழிவுகள் அனைத்தையும் நிலைகுலைய வைத்திருந்தது. அந்த மக்களுக்கு ஒரு நேர கஞ்சியாவது வழங்குவதற்குத் துடித்து கொண்டிருந்தார்கள். அரச உதவி, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி என அனைத்தையும் ஒருங்கிணைத்து மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் கைகளில் இருந்தது.

மட்டக்களப்பில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக அன்று பிரதமராக இருந்த ஆர்.பிரேமதாஸ மட்டக்களப்புக்கு 1979 ஜனவரியில் வருகை தந்தார். மட்டக்களப்பு தொகுதியின் தமிழ் பிரதிநிதியாக இருந்த இராசதுரை அவர்களுக்கு கட்சியின் கொள்கையா? அல்லது அந்த மக்களுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு பணியா? என்ற கேள்வியே மேலோங்கியிருந்தது. தன் மக்களுக்கான புனர்வாழ்வு தான் முக்கியம் எனக் கருதிய அவர், பிரதமர் பிரமதாஸ மாவட்ட செயலகத்தில் கலந்து கொண்ட கூட்டத்தில் பங்குபற்றி, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள், அழிவுகள் உடனடியாக செய்ய வேண்டிய பணிகள், நீண்டகால பணிகள் என விரிவான அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தார்.

அடுத்த வாரம் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச்சபை ( நீங்கள் உட்பட ) கட்சியின் கொள்கையை மீறி பிரதமரை முத்தவெளி மைதானத்தில் வரவேற்றமை ஏன்?, கச்சேரியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டமை ஏன்- என விளக்கம் கேட்பதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராசதுரையிடம் விளக்கம் கேட்டு கடிதமும் அனுப்பினீர்கள். அந்த தீர் மானத்தை வழிமொழிந்த தாங்கள் தான் என்றும் அறிந்தேன்.

அதன் பின்னர் அதைக் காரணம் காட்டி கட்சியிலிருந்தும் அவரை நீக்கினீர்கள். அப்போது தான் கட்சியிலிருந்து நீக்கப்படுவது அநியாயம் என திருமதி செல்வநாயகத்துக்கும், திருமதி திருச்செல்வத்துக்கும் அவர் உருக்கமான கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார்.

அதன் பின்னர் அவர் ஆளும் கட்சியில் சேர்ந்துக்கொண்டார்.

அழிந்து சின்னாபின்னமாக கிடக்கும் தனது பிரதேசத்தை மீண்டெடுக்க வேண்டும்



என்பதற்காக பிரதமர் கலந்து கொண்ட கூட்டத்தில் பங்குபற்றியமைக்கான இராசதுரைக்கு அந்த தண்டனை தமிழர் விடுதலைக் கூட்டணியால் வழங்கப்பட்டது. 25வருடங்களுக்கு மேலாகக் கட்சியை வளர்த்தெடுத்தவர் தந்தை செல்வநாயகத்துக்கு பின் சிரேஷ்ட உறுப்பினராக இருந்தவர் என்பதை எல்லாம் புறந்தள்ளிவிட்டு இராசதுரைக்கு கட்சி வழங்கிய தண்டனையை ஏற்றுக் கொண்டிருந்தீர்கள்.

இராசதுரை ஒரே ஒரு தடவைதான் பிரதமர் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்து கொண்டார். நீங்கள் இப்போது ஜனாதிபதியும், பிரதமரும் அமைச்சர்களும் எங்கெங்கு வருகிறார்களோ அங்கெல்லாம் ஓடிச்சென்று அவர்களுக்கு மாலையிட்டு அவர்கள் பின்னால் நிற்கிறீர்களே, இப்போது எங்கே போனது கட்சியின் கொள்கை? ஆளும் கட்சியினரை வரவேற்பதில்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்த தீர்மானத்தை இரத்து செய்து வடக்கு - கிழக்குக்கு வரும் ஆளும் கட்சியினரை வரவேற்பது என்ற தீர்மானத்தை உங்கள் கட்சி எப்போது எடுத்தது?

அன்று இராசதுரை ஒரேஒரு தடவை செய்தமையை இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நீங்கள் உட்பட பெரும்பாலானவர்கள் தினம் தினம் செய்து வருகிறீர்களே?

இப்போது இரு காரியங்களை (உங்கள் பாஷையில் கருமங்களை) செய்வது நல்லது என நினைக்கிறேன்.

1. இப்போது உயிருடன் இருக்கும் இராசதுரையிடம் நீங்கள் மன்னிப்புக் கோருங்கள்.

2. தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் வரைக்குமாவது தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கும் வகையில் நடந்து கொள்ளுங்கள்.

இறுதியாக ஒன்றை கூறி விடைபெறுகிறேன். யார் என்னதான் கூறினாலும் தமிழ் மக்களின் அரசியல் தலைமை தமிழ்க்தேசியக்கூட்டமைப்புத் தான். நீங்கள் உயிருடன் இருக்கும் வரை அதன் தலைவர் நீங்கள் தான். அதேநேரம் தமிழ் மக்களின் மனம்நோகும் படி நடந்து கொள்ளாதீர்கள்.

84 அகவையை பூர்த்தி செய்யும் உங்களை வாழ்த்துவதற்குவயதில்லை என்றாலும் நீங்கள் நீடூழி வாழ வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

நன்றி:தினக்கதிர்

# ஜெயவர்த்தனபுர பல்கலை ஊடாக சமூகப்பணி பட்டப்படிப்பை வழங்க ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, பெப்.07

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சின் கீழ் இயங்கிவரும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா பட்டப் படிப்புகளை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் வழங்கும் புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.



அதன்படி தற்போது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் 'சமூகப்பணி' இளமாணிப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டம் உள்ளிட்ட அனைத்து பட்டப்படிப்பு மற்றும் டிப்புளோமா பட்டப் படிப்புகள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் ஊடாக வழங்கப்படும்.

கடந்த முதலாம் திகதி பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது.

இந்த நிகழ்வில் சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பீ. திசாநாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கலைப் பிரிவு பீடாதிபதி பேராசிரியர் சந்திரகுமார், சமூக விஞ்ஞான பிரிவு பீடாதிபதி பேராசிரியர் மயூரசமரசிங்க, முகாமைத்துவ பிரிவு பீடாதிபதி பேராசிரியர் வீரகோன் பண்டா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சின் செயலாளர் மஹிந்த செனவிரத்ன மற்றும் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோர் புரிந்துணர்வு உடன்படிக்கையை பரிமாறிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 'ரோல் போல்' உலகக் கிண்ணப் போட்டியில் மன்னார் வீர, வீராங்கனைகள் பங்கேற்பு!










மன்னார், பெப்.07

பங்களாதேஷில் இடம் பெறவுள்ள 'ரோல் போல்' உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டத்தில் இருந்து 4 விர, வீராங்கனைகள் பங்களாதேஷுக்கு பயணமாகவுள்ளனர்.

பங்களாதேஷ் தலைநக்ரான டாக்காவில் இடம் பெறவுள்ள 4 ஆவது 'ரோல் போல்' உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் 4 ஆவது தடவையாக இடம் பெறவுள்ள இந்த 'ரோல் போல்' உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 3 வீராங்கனைகளும், ஒரு வீரருமே பங்களாதேஷுக்கு செல்லவுள்ளனர்.

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவிகள் யோ.திவ்வியா, ஏ.திவ்வியா , மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் எஸ். அருண், மற்றும் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை மாணவி எஸ்.அன்ரலின் ஆகியோரே 'ரோல் போல்' உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க-112)

# தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு உடற்பயிற்சி!

வவுனியா, பெப்.07

உடல் ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் பேணும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அரச உத்தியோகத்தர்களுக்கான ஒருவார கால உடற்பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

நேற்றுத் தொடங்கிய இந்த உடற்பயிற்சி ஒருவார காலம் இடம்பெறவுள்ளது. இத் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காலை 9 மணியில் இருந்து 9.30 வரை அரச உத்தியோகத்தர்கள் தமது அலுவலகங்களில் உடற்பயிற்சியில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதுடன் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் விதமாக அனைத்து அரச திணைக்களங்களிலும் ஒருவார காலம் இவ் உடற்பயிற்சித் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த வகையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்பகுமார தலைமையில் உடற்பயிற்சி நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். (க-100)




# அல்லைப்பிட்டி றோ.க வின் இல்ல மெய்வன்மைப் போட்டி

மன்னார், பெப்.07

அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை அதிபர் ச.மனோகரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இப்போட்டிகளில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக தீவகத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் மற்றும் அருட்தந்தை டேவிட் அடிகளார் உட்பட மேலும் சிலர் கலந்துகொண்டனர்.

(க-8)




# வவுனியா மாவட்டத்தின் உதைபந்தாட்ட சங்க கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார் செல்வம் எம்.பி.





வவுனியா , பெப்.07


வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட கழகங்களுக்கு நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதித் திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 20 கழகங்கள் மற்றும் 03 பாடசாலைகளுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ்.ஜோன்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கச் செயலாளர் எஸ்.நாகராஜன், பொருளாளர் லரீப், விளையாட்டுக் கழக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க- 100)

# ஆஸ்திரேலியாவுடனான இருபதுக்கு 20 போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார் அஞ்சலோ மத்யூஸ்



கொழும்பு, பெப்.07

இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள அணியு ஆஸ்திரேலிய டனான மூன்று போட்டி களைக் கொண்ட இருப துக்கு 20 தொடரில் அஞ்சலோ மத்யூஸ் பங்குபற்ற மாட்டார் என்று இலங்கை கிரிக்கெட் சபை யால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கை யில் உறுதி செய்யப்பட் டுள்ளது.

ஜொகன்னஸ்பர்க், வாண்டரர்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணியுட னான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியில் காயமுற்ற நிலையில், அணியை வெற்றிப் பாதைக்கு வழி நடத்தி யிருந்தார். அந்தப் போட்டி யின் அவர் பின்னர் நாடு திரும்பியிருந்தார்.

தென்னாபிரிக்காவில் தற்போது நடைபெற்று வரும் ஒருநாள் தொடர் முடிவுற்றவுடன் அங்கி ருந்து இலங்கை அணி நேரடியாக ஆஸ்திரேலியா செல்கிறது. அதேநேரம், இருபதுக்கு 20 போட்டி களில் நிபுணத்துவம் பெற்ற மற்றும் சில வீரர்கள் பெப்ரவரி 13 ஆம் திகதி கான்பெராவில் இலங்கை அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளது.

அதனைத் தொடர்ந்து இலங்கை அணி, பெப்ரவரி 15 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அந்நாட்டின் பிரதமர் பதி னொருவர் அணியுடனான பயிற்சி போட்டியில் பங்குபற்றவுள்ளது.

அதனை தொடர்ந்து, பெப்ரவரி 17ஆம், 19ஆம், மற்றும் 22ஆம் திகதிகளில் ஆஸ்திரேலிய அணியுட னான மூன்று இருபதுக்கு 20 போட்டிகளில் இலங்கை அணி விளையாடவுள்ளது.

இந்தப் போட்டிகளின் பின்னர் பெப்ரவரி 23ஆம் திகதி இலங்கை அணி நாடு திரும்பும் வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ள நம்பகரமான செய்திகளின்படி, தென்னா பிரிக்க மண்ணில் இடம் பெறும் ஒருநாள் போட்டிக ளுக்கு தலைமை தாங்கிய அணித் தலைவர் தினேஷ் சந்திமல் மற்றும் தனஞ்சய டி சில்வா, குசல் மென்டிஸ் மற்றும் சுரங்க லக்மால் ஆகியோருக்கு ஆஸ்தி ரேலிய அணியுடனான இருபதுக்கு 20 தொடரில் ஓய்வளிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, அனுபவ வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க முழங்கால் காயத்தி லிருந்து முழுமையாக மீண்டுள்ளார்.

இந் நிலையில், ஆஸ்தி ரேலிய அணியுடனான தொடரில் அணியில் அவர் இணைத்துக்கொள்ளப்பட அதிகளவான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அதேவேளை, தற்போது ஒருநாள் அணியை வழி நடத்தும் உபுல் தரங்க ஆஸ்திரேலியாவுடனான தொடரிலும் அணியை வழிநடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்தத் தொடருக்கான இலங்கை அணியின் உத்தி யோகபூர்வ விவரம் இன்று வெளியிடப்படவுள்ளது.

# 'வடக்கின் சுப்பர் கிங் 2016' கிண்ணத்தை வென்றது இளவாலை யங் ஹென்றிஸ் அணி!

யாழ்ப்பாணம், பெப்.07

மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தினது ஏற்பாட்டில் இடம்பெற்ற 'வடக்கின் சுப்பர் கிங்-2016' கிண்ணத் திற்கான இறுதிப் போட்டி யில் மன்னார் ஹில்லரி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்திய இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தை தனதாக்கியுள்ளது.



இளவாலை யங் ஹென் றிஸ் அணி, விறுவிறுப்பான இத்தொடரின் அரையிறுதி யில் உருத்திரபுரம் அணி யை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று முதல் முறையாக தொடரின் இறுதிப் போட்டிக்கு முன் னேறியிருந்தது.

அவ்வாறே மறு பக்கத்தில் மன்னார் ஹில்லரி அணி, திக்கம் இளைஞர் அணியை 4-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியதன் மூலம், இரண்டாவது முறையாகவும் 'வடக்கின் சுப்பர் கிங்' போட்டித் தொடரின் இறுதியில் தடம் பதித்திருந்தது.

இதனடிப்படையில், இவ் விரு அணிகளுக்கும் இடை யிலான தீர்மானம் மிக்க இறுதிப் போட்டி யாழ்ப் பாணம் துரையப்பா விளை யாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ரசிகர்களின் பலத்த ஆதரவிற்கு மத்தியில் ஆரம்பமான இப்போட் டியில், ஆரம்பத்திலேயே தனக்குக் கிடைத்த ப்ரீ கிக்கை கோலாக்காது வீணடித்தார் ஹில்லரியின் நட்சத்திர வீரர் றஞ்சன்.

தொடர்ந்து வேகமாக ஆடிய யங் ஹென்றிஸ் அணிக்கு கோல் பெறுவ தற்குக் கிடைத்த வாய்ப்பை மதுஸ்ரன், யூட் சுமன் ஆகியோர் அடுத்தடுத்து கோட்டை விட்டனர்.

அதேவேளை, ஹில்லரி யின் யேசுதாசன், டிலுக்சன் ஆகியோர் கோல் கம்பத்தை நோக்கி லாவகமாக உதைத்த போதும் அவற்றை இலகுவாக முறியடித்தார் ஹென்றிஸின் கோல் காப்பாளர் அமல்ராஜ்.

ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் அனோஜன் கொடுத்த பந்தை மிகவும் லாவகமாக கோலாக மாற்றி னார் மகிபன். தொடர்ந்தும் மன்னார் ஹில்லரி கிடைத்த சந்தர்ப்பங்களில் பந்தை கோல் காப்பாளரின் கைகளை நோக்கியே உதைத்து கொண்டிருந்தமையினால், யங் ஹென்றிஸ் அணியின் முன்னிலைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

எனவே, மகிபனின் ஒரு கோலுடன் நிறைவடைந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் தாங்களின் ஆதிக் கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதனை உணர்ந்து, மிக வேகமாக ஹென்றிஸின் கோல் பரப்பை ஆக்கிரமித்தனர் ஹில்லரி வீரர்கள்.

ஆனாலும் அவர்களது கோல் பெறும் முயற்சி களைத் தடை செய்து கொண்டிருந்தார் ஹென் றிஸின் பின்கள வீரரான ரூபன்ராஜ்.

போட்டியின் 42 ஆவது நிமிடத்தில் மகிபன் இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்து யங் ஹென்றிஸை இரு கோல் களினால் முன்னிலைப் படுத்தினார்.

அதற்குப் பதிலடி கொடுக் கும் விதமாக, றஞ்சன் வேக மாக கடத்திக் கொண்டு வந்து பந்தை யேசுதாசன் கோல் பரப்பை நோக்கி உதைந்த போது கம்பத்தில் பந்து பட்டு வெளியேறி யமையினால் அவ்வணிக் கான கோல் வாய்ப்பு மயிரி ழையில் தவறவிடப்பட்டது.

பின், 43 ஆவது நிமிடத் தில் தனேஸ் மேலும் ஒரு கோலைப் போட்டு ஹென்றிஸ் அணியின் ஆதிக்கத்தை உறுதி செய்தார். தொடர்ந்தும் ஹென்றிஸ் அணியினருக்கு கோல் போடும் வாய்ப்புக் கள் கிடைத்த போதும் அவர்கள் அதனைத் தவற விட, மறு பக்கத்தில் தமது முதல் கோலுக்காகப் போராடிக் கொண்டிருந்தனர் ஹில்லரி அணியினர்.

போராட்டத்தின் பயனாக இறுதி (50) நிமிடத்தில் றஞ்சன் கொடுத்த பந்தை லாவகமாகக் கோலாக்கினார் யேசுதாசன். பிற்பாதி கோல் களுடன் இந்த விறுவிறுப் பான போட்டியில் மன்னார் ஹில்லரி அணியை வீழ்த்தி, 'வடக்கின் சுப்பர் கிங்- 2016' கிண்ணத்தைத் தமதாக்கினர் இளவாலை யங் ஹென்றிஸ் அணி யினர். (க-08)

## முஸ்லிம்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடா விவேகானந்தா விளையாட்டுக்கழகத்திடலுக்கு இம்மாதம் 10 ஆம் திகதி காலை பவனி வரக் காத்திருக்கின்றார்கள்.

எமது அழைப்பு கட்சி சார்ந்ததல்ல; மதம் சார்ந்ததல்ல; இனம் சார்ந்ததல்ல. எமது அழைப்பு தமிழ்மொழி சார்ந்தது. தமிழ்மொழி பேசும் யாவரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். எமது பவனி 'எழுக தமிழர்' என்று பெயரிடப்படவில்லை. இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சகோதரத்துவத்தை அவர்களின் பொது மொழியாம் செந்தமிழ் ஊடாக நிலை நிறுத்தவே எமது பவனியானது 'எழுக தமிழ்' என்று பெயர்பெற்றது.

ஏன் தமிழுக்கு முதலிடம் கொடுத்துள்ளீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். ஏனென்றால் கிழக்கு மாகாணத்தில் 85 சதவிகிதத்துக்கு மேல் தமிழ் பேசுவோர் இருந்த காலம் போய் தற்போது மூன்றில் ஒரு பங்கு சிங்கள மொழியால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. காணிகள் பறிபோயுள்ளன; கலைகள் சிதைவடைந்துள்ளன; கலாசாரம் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் 'எழுக சிங்களம்' எல்லை தாண்டி வந்து இங்கு குடிகொண்டுள்ளது. சுயநலம் மிக்க அரசியல்வாதிகளுக்கன்றி மற்றவர்கள் யாவர்க்கும் இது வெள்ளிடைமலை.

இதுகாலமும் ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் இனி யாவது விடிவு காணவே 'எழுக தமிழ்' எழுந்து வருகின்றது.

இந்து – முஸ்லிம் மக்களுக்கிடையேயான முரண்பாடுகள் ஆக்கப்பட்டவையே ஒழிய, அனவரதமும் அமைந்திருந்த ஒரு நிலைப்பாடு அல்ல. அதைத் தற்போது எமது முஸ்லிம் சகோதரர்கள் தெரிந்து கொண்டு வருகின்றார்கள்.

இந்து, கிறிஸ்தவ, தமிழ் மக்களும் இஸ்லாமியத் தமிழ் மக்களும் காலாதி காலமாக பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் இசைந்து செயற்பட்டுவிட்டு அண்மைக்காலங்களில் மட்டும் ஏன் முரண்பட்டு இருக்கின்றார்கள் என்பதை இருதரப்பாரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

முரண்பாடுகள் எம்மேல் திணிக்கப்பட்டமையே காரணம். அவ்வாறு திணிக்கப்பட்டதற்கு எமது குறுகிய நோக்கங்கள் கொண்ட அரசியல்வாதிகள் விதிவிலக்கன்று.

தமிழ் பேசும் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களின் ஒற்றுமையே கிழக்கிலங்கையைக் காப்பாற்றுமே ஒழிய 'பொங்கு சிங்களத்தின்' பயண வேகத்தை வேறெந்த சக்தியாலும் கட்டுப்படுத்த முடியாது. நாம் தொடர்ந்தும் எமது வேற்றுமைகளுக்கு முதலிடம் கொடுத்தோமேயானால் கிழக்கு மாகாணம் மொழி மாற்றம் பெறுவது திண்ணமே.

தொடர்ந்து வந்த பெரும்பான்மை இனம் சார்பான அரசாங்கங்கள் யாவும் ஒரே நிகழ்ச்சி நிரலின்படியே செயற்பட்டு வருகின்றன. கட்சிகள் மாறினாலும் கரவான குடியேற்ற எண்ணங்களை எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் கண்டிக்கவில்லை; கடியவில்லை. மாறாகத் தாமும் சேர்ந்து வடகிழக்கு மாகாணங்களின் குடிப்பரம்பலை, மொழிப்பரம்பலை மாற்றவே செய்துள்ளன.

எனவே, வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் பாதுகாப்புக் கருதியே எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வடக்கு, கிழக்கு இணைப்பொன்றே தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து தமது வாழ்விடங்களில் நிம்மதியாக வாழ வழி வகுக்கும்.

இன சௌஜன்யத்தைக் கெடுக்கப் பார்க்கின்றார்கள், இன விரிசல்களுக்கு இடமளிக்கப் பார்க்கின்றார்கள் என்று எம்மேல் குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. இதுவரை காலமும் நடைபெற்று வரும் இன ஒடுக்கல்கள் பற்றி நாம் கூறினால் அது இனவிரிசலாகப் பெரும்பான்மையினராலும் எம்முள் சிலராலும் அர்த்தப்படுத்தப்படுகின்றது.

உண்மையைக் கூறுவதைத் தடுக்க, எம்மைப் பயப்படுத்தி வைக்க, இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வழி அமைப்பன என்பது அவர்களின் எதிர்பார்ப்புப் போலத் தெரிகின்றது.

இப்பொழுது இருக்கும் சமாதானமானது இன நல்லுறவால் ஏற்பட்ட சமாதானம் அல்ல. செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றே. அதனால்தான் இராணுவத்தினரை பெரும் அளவினதாக வடக்கிலும், கிழக்கிலும் வைத்திருக்க விழைகின்றார்கள் மத்தியில் பதவியில் உள்ளோர்.

எங்களிடம் இருந்துகிடைக்கும் பாதுகாப்பு உங்களுக்குத் தமிழர்களிடம் இருந்து கிடைக்காது என்று கூறி தமிழ் பேசும் முஸ்லிம் மக்களிடையே சந்தேகங்களையும் ஐயப்பாடுகளையும் வளர்க்கப் பார்க்கின்றார்கள். இவற்றையெல்லாம் களையவே அனைத்துத் தமிழ்ப் பேசும் மக்களிடையேயும் புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயம் தற்போது எழுந்துள்ளது.

அரசியல் தீர்வு பற்றிப் பேசும் போது தமிழ் பேசும் மக்கள் யாவருமே கூட்டாட்சியாகிய சமஷ்டி முறையே சிறந்தது என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். ஆனால், கடந்த கால நிகழ்வுகளின் காரணமாகவோ வேறு காரணங்களுக்காகவோ தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் உறுதி தளர்ந்து காணப்படுகின்றார்கள்.

தமிழ் மக்கள் தம்மை ஒதுக்கி விடுவார்களோ, தடுத்து வைப்பார்களோ என்று அச்சம் கொள்கின்றார்கள். ஆனால், அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாய் இருந்தால் என்ன, மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவையாக இருந்தால் என்ன தமிழ் மொழி பேசும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களுக்காக ஓர் அலகை ஏற்படுத்துவதில் அவர்கள் தம் பூரண சம்மதத்தையே வெளிக்காட்டி வந்து உள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாகத் தமிழ் மொழி பேசப்பட்டு வந்த மாகாணங்களே என்பதை உத்தியோகபூர்வமாகப் பதிந்து வைத்திருப்பது அத்தியாவசியம் என்பது தற்பொழுது எல்லாத் தமிழ் பேசுந் தரப்பாருக்கும் புரிகின்றது. ஆனால், சந்தேகங்கள், ஐயப்பாடுகள் மக்களை ஒருங்கிணைக்கவிடாது தடுக்கின்றன.

'எழுக தமிழ்' அரசியல் சார்ந்தது; ஆனால் அரசியற் கட்சிகள் சார்ந்ததல்ல. சமூகம் சார்ந்தது; ஆனால் சமயங்களைச் சார்ந்ததல்ல. 'தமிழ் மொழி' சார்ந்தது; ஆனால் தமிழ் மொழியல்லாதவற்றைப் புறக்கணிக்காதது.

தமிழ்மொழிக்கும் அதைப் பேசும் மக்களுக்கும் தக்க ஏற்பினை வழங்க வேண்டும் என்று கேட்டே 'எழுக தமிழ்' இம்மாதம் 10ஆம் திகதி நாவற்குடா விவேகானந்தா விளையாட்டுக் கழகத் திடலில் நடைபெற இருக்கின்றது. அதில் சகலரும் பங்குபற்ற வேண்டும் என்று கோரி எமது ஒற்றுமையை உறுதியாச் செய்ய இது ஒரு நல்ல தருணம் என்று கூறி வைக்கின்றேன். – என்று உள்ளது. (உ)

# ஜெயலலிதா மரணத்தில் எந்த மர்மமும் இல்லையாம்!

## சிகிச்சை அளித்த டாக்டர் குழு நேற்று விளக்கம்

உடல்நலக்குறைவு காரணமாக மரணமடைந்த தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொழுது அங்கே நடந்தது என்ன என்று அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் குழு விளக்கமளித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சையளித்த இங்கிலாந்து மருத்துவர் ரிச்சர்ட் பீலே, அப்பல்லோ மருத்துவர்கள் பாலாஜி மற்றும் பாபு ஆகியோர் அடங்கிய குழு நேற்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் செய்தியாளர்களைச் சந்தித்தது.

ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள், பின்பற்றப்பட்ட நடைமுறைகள், இது தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகங்கள் என பல்வேறு விடயங்கள் தொடர்பில் செய்தியாளர்கள் மருத்துவர்கள் குழுவிடம் சரமாரியாக கேள்விகளைக் கேட்டனர். அதற்கு மருத்துவர்கள் குழு அளித்த பதில்களின் தொகுப்பு பின்வருமாறு:-

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு உலகின் உன்னத சிகிச்சை முறைகளைப் பின்பற்றி சிகிச்சை அளிக்கப்பட்டது. சர்வதேச மருத்துவ முறைகளுக்கு உட்பட்டுத்தான் சிகிச்சைவழிமுறைகள் அமைந்தன. ஆனால் ஜெயலலிதாவின் மரணத்துக்குப் பிறகு சிகிச்சை தொடர்பாக பல்வேறு விதமான வதந்திகள் உலாவுகின்றன. அத்தகைய சந்தேகங்களைத் தீர்ப்பது அவசியம் என்பதால் அதற்கு விளக்கம் அளிக்கவே இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம். இது அப்பலோ மருத்துவமனை ஏற்பாடு செய்துள்ள சந்திப்பு அல்ல. தமிழக அரசின் அழைப்பின் பேரில்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சுயநினைவோடே சிகிச்சைக்கு வந்தார்

சிகிச்சைக்குக் கொண்டு வரும்போது ஜெயலலிதா சுயநினைவில்தான் இருந்தார். முதலில் காய்ச்சல் மற்றும் நீரிழிவு காரணமாகவே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதற்குப் பின்னர் நடத்தப்பட்ட சோதனைகளின் பொழுது அவருக்குக் கடுமையான நோய்த்தொற்று இருந்தமை கண்டறியப்பட்டது. நோய்த்தொற்றின் காரணமாக அவருடைய நுரையீரல், இதயம் ஆகியவை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தன. மூச்சுவிடுவதில் கடும் சிரமம் உண்டானது. மேலும் அவரது இரத்தத்தில் பக்டீரியா அதிகமாகக் கலந் திருந்தது. எனவே நாங்கள் தொடர்ந்து அவரது உடல்நிலையை ஆய்வு செய்து வந்தோம்.

அவரது இரத்தத்தில் சர்க்கரை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்திருந்தது. மேலும் சிறுநீரகத் தொற்றும் ஏற்பட்டது. இதனால் அவருக்கு 'செப்சிஸ்' எனப்படும் உடல் நலக்குறைவு உண்டானது. இதனுடைய தொடர் விளைவுகளே அவருக்கு மேலும் தொடர் உடல் நலக் குறைபாடுகளை உருவாக்கின.

மூச்சுவிடுவதில் சிரமம் இருந்ததால் அவருக்கு வெண்டிலேட்டர் கருவி பொருத்தப்பட்டது. பின்னர் அவருக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் மற்றும் சிகிச்சைகளின் தீவிரத் தன்மையின் காரணமாக, மருந்துகள் மூலம் வரவழைக்கப்பட்ட உறக்கத்தில் இருக்க வைக்கப்பட்டார். பின்னர் சிகிச்சை மூலம் எழுப்பப்பட்ட அவருக்கு பிஸியோ தெரபி உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

### ஒப்பத்துக்குப் பதிலாக கைரேகை பதிப்பு

இதற்கிடையே சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர்களுக்கான அனுமதிக் கடிதத்தில் கையெழுத்திட வேண்டி 22.10. 2016 அன்று கட்சியினர் அவரை அணுகினர். கடிதம் அவருக்குப் படித்துக் காட்டப்பட்டது. அப்பொழுது அவர் சுய நினைவுடன்தான் இருந்தார். கையில் ட்ரிப் ஏற்றப்பட்டதன் காரணமாக கை வீங்கியிருந்தது. எனவே கையெழுத்திட முடியாத காரணத்தால் அவர் கைரேகையைப் பதித்தார். இதற்கு மருத்துவர் பாபு சாட்சியாக இருந்தார்.

அவர் முடியும்போதெல்லாம் எங்களுடன் உரையாடினார். தொலைக்காட்சி பார்த்தார். தயிர் சாதம் உள்ளிட்ட உணவுகளை எடுத்துக் கொண்டார். அவை அனைத்தும் உண்மைதான். பின்னர் ட்ரக்கஸ்டாமி சிகிச்சைக்குப் பின்னர் அவருக்கு நினைவு முழுமையாகத் திரும்பியது. ஆனால், தொண்டையில் துளையிடப்பட்டதால் அவரால் பேச முடியாத நிலையில் எங்களுடன் சைகை முறையில் உரையாடுவார். மருத்துவர் பீலேயின் குடும்பம் மற்றும் குழந்தைகள் தொடர்பிலும் அப்போது அவர் கேட்டறிந்தார்.

அவரது உடல்நிலையில் சிறிது சிறிதாக முன்னேற்றம் ஏற்பட்டு வந்த நிலையில்தான் கடந்த டிசெம்பர் 4ஆம் திகதி மாலை அவருக்கு இருதய அடைப்பு ஏற்பட்டது. அப்போது அங்கே மருத்துவப் பணியாளர்கள் இருந்ததால் உடனடியாக அவருக்கு 'சி.பி.ஆர்' சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அது பலன் அளிக்காததால் அவருக்கு 'ஏக்கோ' கருவி பொருத்தப்பட்டது. அப்போது அதைவிட செய்வதற்கான சிறந்த வழி ஒன்றும் இருக்கவில்லை.

ஆனால் 'எக்கோ' கருவி பொருத்தப்பட்ட மறுநாளும் அவரது உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை. நின்ற இருதயத் துடிப்பானது மீண்டும் செயற்படவே இல்லை. இந்த நிலையில்தான் சசிகலா, ஜெயலலிதாவின் குடும்பத்தினர், அரசு உயர் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

### சடலத்தில் 'எம்பாமிங்'

அன்று நள்ளிரவு அவரது மரணம் உறுதி செய்யப்பட்டது. பின்னர் சென்னை எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக உடலியற்றுறை தலைமை மருத்துவரான திருமதி சுதா சேய்யன் தலைமையிலான குழுவினர் அவரது உடலை 'எம்பார்மிங்' எனப்படும் பதப்படுத்தல் முறைக்கு உட்படுத்தினர்.

பிரபலமான தலைவர்கள் மரணம் அடையும் பொழுது அவர்களது உடலை 'எம்பாமிங்' செய்வது வழக்கமான ஒன்றுதான். முன்னாள் முதல்வர் எம்.ஜி. ஆர் உடலும் இதே முறையில்தான் 'எம்பார்மிங்' செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் பொழுது பார்வையாளர்களால் எதுவும் ஆகாமல் சிதையாமல் இருப்பதற்கே இம்முறை பயன்படுத்தப்படுகிறது. அன்று நள்ளிரவு 12.15 இற்குத் தொடங்கிய இந்தப்பணி 20 நிமிடங்கள் வரை நீடித்தன. அவரது உடலில் 5.5 லீற்றர் 'எம்பார்மிங்' திரவமானது உட்செலுத்தப்பட்டது.

உடல்நிலை சரியில்லாத பொழுது ஜெயலலிதாவைச் சந்திக்க விரும்பியவர்கள் தொடர்பாக அவருக்கு எழுதிக் காட்டப்பட்டது. அவர் சம்மதம் தெரிவித்தவர்கள் மட்டுமே அவரைச் சந்தித்தனர்.

சிகிச்சை பெற்று வந்த ஜெயலலிதாவின் புகைப்படத்தை வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. நோயாளியின் அந்தரங்கத்தை நாம் மதிக்க வேண்டும். முதல்வர் ஜெயலலிதாவுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்ட இடத்தில் சிசிடிவி கமராக்கள் எவையும் இருக்கவில்லை. கமராக்கள் பொருத்தப்படுவது அபத்தம்.

அவரை மேல்சிகிச்சைக்காக லண்டன் கொண்டு செல்வதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. ஆனால் அதில் நிறைய சிக்கல்கள் இருந்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. லண்டன் சென்று சிகிச்சை பெறுவதை அவரும் விரும்பவில்லை.

அவரது உடல்நிலை பற்றி சசிகலா குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுக்கு சீரான கால அளவில் எடுத்துரைக்கப்பட்டது. ஆளுநர் வித்யாசாகர் ராவ் முதன்முறையாக மருத்துவமனைக்கு வந்திருந்த பொழுது கண்ணாடிக் கதவு வழியாக ஜெயலலிதாவைப் பார்த்தார். இரண்டாவது முறையாக வந்த பொழுது பார்க்கவில்லை.

சற்றும் எதிர்பாராத விதமாக இருதய அடைப்பு ஏற்பட்டிருக்காவிட்டால் அவர் ஒரு வாரத்தில் வீடு திரும்பியிருப்பார்.

### எந்த அவயமும் அகற்றப்படவில்லை

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு மருத்துவ சிகிச்சையின் மூலம் கால்கள் உட்பட உடலின் எந்தப் பாகமும் அகற்றப்படவில்லை. மேலும் அவருக்கு எந்தவிதமான உறுப்பு மாற்று சிகிச்சையும் செய்யப்படவில்லை.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் எந்த மர்மமும் இல்லை. அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை முறைகள் தொடர்பில் அவருக்கு நெருக்கமானவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் தினசரி விளக்கமளிக்கப்பட்டது. இது குறித்த சந்தேகங்கள் நியாயமானவை அல்ல.

ஜெயலலிதாவின் மருத்துவ சிகிச்சைக்கு 5.30 கோடி ரூபா வரை செலவாகியது. சிகிச்சைக்கான கட்டணப்பட்டியல் அவரது உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை அப்பலோ மருத்துவமனை மேலாண்மை இயக்குனரிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். –என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குடியிருப்பு பகுதியை விடுவித்து தங்களை அங்கு மீளக்குடிய மர்த்த வேண்டும் எனக் கோரி அப்பகுதி மக்கள் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி தொடக்கம் கவன வீர்ப்புப் போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றனர். நேற்று 7 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது.

பிலக்குடியிருப்பு கிராமத்தில் 84 குடும்பங்களுக்கு சொந்த மான 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை ஆக்கிரமித்து விமா னப்படைத்தளம் அமைத்துள்ள விமானப்படையினர் அதனை பலப்படுத்தி வேலிகள் அமைத்து மக்கள் உள்ளே செல்ல முடியாத வாறு தடைகளை ஏற்படுத்தியுள் ளனர்.

இந்தநிலையில் கடந்த மாதம் 31ஆம் திகதி அதிகாரிகள் அங்கு வருகை தந்து காணிகளை அளந்து வழங்குவர் எனவும் காணிகளுக்கு சொந்தமான மக் கள் அனைவரையும் அப்பகு திக்கு வருமாறும் கேப்பாபிலவு கிராமசேவகர் அறிவித்தல் விடுத் திருந்தார்.

அதை நம்பி அங்கு சென்ற மக்கள் அன்று முழுநாளும் காத்திருந்தனர். ஆனால், யாரும் அங்கு செல்லவில்லை. அத னால், கவலையும் விசனமும் அடைந்த மக்கள், தமது சொந்த நிலங்களில் காலடி எடுத்து வைக் கும் வரை அங்கிருந்து அகல மாட்டார்கள் எனத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர்.

இவர்கள் போராட்டத்தில் ஈடு படுகின்ற செய்தி அறிந்து வடக்கு மாகாண முதலமைச்சர், மத்திய அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண அமைச்சர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பி னர்கள் மற்றும் அரசியல்வாதி கள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அந்த முகாமின் படை அதிகாரி போன்ற பலரும் அங்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடி வருகின்றனர். சிலர் அவர்களு டன் இருந்து போராட்டத்திலும் பங்கெடுத்து வருகின்றனர்.

நேற்று வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சிவமோ கன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந் திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் போன் றோர் அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மரங்களுக்கு கீழே உணவு சமைத்து உண்டு வரு கின்றனர். மாணவர்களும் இந் தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். அவர்களின் கல்வி நட வடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள் ளன.

அதனால், நேற்று முல்லைத் தீவு கல்வி வலயத்திலிருந்து போராட்டம் நடைபெறும் இடத் துக்குச் சென்ற பிரதிக்கல்வி பணிப்பாளர் ஆதுவன் தலைமை யிலான ஆசிரியர் குழுவினர் மாணவர்களின் கல்வி நடவடிக் கைகள் தொடர்பாக ஆராய்ந்த னர். அந்த இடத்திலேயே மாண வர்களுக்கு கல்விச் செயற்பாடு களையும் முன்னெடுத்தனர். அங்குள்ள மாணவர்கள் வீதி ஓரத்தில் இருந்து கற்றல் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று அங்கு விசேட மருத் துவக் குழு ஒன்று சென்று மருத் துவ பரிசோதனைகளில் ஈடுபட் டது. பனி, வெயில் போன்றவற் றையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தில் ஈடுபடும் அந்த மக் களில் காய்ச்சல், சளி, இருமல் போன்ற நோய்களால் பீடிக்கப் பட்ட சிறுவர்கள், முதியோர் மற் றும் அனைவருக்கும் மருந்து கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, மக்களின் போராட்டம் வெற்றிபெற ஆசி வேண்டி கேப்பாபிலவு முத்து விநாயகர் ஆலயத்தில் உள்ள அர்ச்சகர் ஒருவர் நேற்று முதல் தொடர் சிவ வழிபாட்டு பூசை ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

மேலும், இன்று செவ்வாய்க் கிழமை நாடாளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளதால் மேற்படி மக்களின் பிரச்சினைகளை அங்கு எடுத்துரைப்பர் என நாடா ளுமன்ற உறுப்பினர்கள் தங்க ளிடம் தெரிவித்துள்ளனர் என மக் கள் கூறினர். (ம-8)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதனால், அலுவலகத்தின் உள்ளே செல்ல முடியாமல் உத்தி யோகத்தர்கள் வீதிகளில் குழுமி நின்றனர்.

புதுக்குடியிருப்பு நகர மத்தி யில் படை முகாம் இருப்பதால் தாங் கள் பல்வேறு வகையில் பாதிப்புக்களை எதிர்கொள் கின்றனர் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித் தனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்து தெரிவிக்கையில் –

படையினர் இங்கு தேநீர்க் கடைகளை நடத்துகின்றனர். பாடசாலைசெல்லும் மாணவர்க ளுக்கு சிகரெட் கொடுக்கின்றனர். மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் வழியில் படையினர் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இதனால் மாணவிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர். இது விரும்பத் தகாத செயற்பாடுகள் இடம் பெறவும் வழிவகுக்கும். – என் றனர்.

மேலும், ம்க்கள் வசிக்கும் இடத்தில் உள்ள அந்த முகா முக்கு மத்தியில் ஆயுதக்கிடங்கு ஒன்றும் உள்ளது. இதனால் எந்த நேரத்தில் என்ன அனர்த் தம் ஏற்படுமோ என்ற அச்சத்து டனேயே நாம் வாழவேண்டி உள்ளது. – என்றும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தமது காணிகளை விட்டு படை யினர் வெளியேறும் வரை போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை புதுக்குடியிருப்புப் பிரதேச செய லாளர் சந்தித்துக் கலந்துரை யாடினார். (ம-170)

## நாமலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தப்பட்ட வங்கி மறுத்துவிட்டது என்றும் சந்திரிகா தகவல் தெரிவித்திருக்கின்றார்.

சில தனிப்பட்ட ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுத்துவதுகுறித்து வேறு சிலர் குரல் எழுப்பி வருகின்றனர் என்று குறிப்பிட் முன்னாள் ஜனாதிபதி, எனினும் பொலிஸார் சம்பந்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். எனவே, சூத்திரதாரிகள் விரைவில் சிக்குவர் என்றும் சந்திரிகா அம்மையார் நம்பிக்கை வெளியிட்டார். (உ)

## சசிகலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த மனுத் தாக்கல் செய்யப் பட்டது.

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழக முன்னாள் முதலமைச் சர் ஜெயலலிதாவுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டபோது அ.தி.மு.க. தொண்டர்கள் வன் முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட மையால் தமிழகத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட் டது.

தற்போது அ.தி.மு.க. சார்பில் சசிகலா முதலமைச்சராகப் பொறுப்பேற்க முயற்சிகள் எடுக் கும் நிலையில், அவர் பொறுப் பேற்ற ஒரு வாரத்துக்குள் உயர் நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்தால் அ.தி.மு.க. தொண்டர்கள் மீண்டும் ஒருமுறை வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டு தமிழ் நாட்டில் இயல்பு வாழ்க்கைக்கு ஊறுநேரும் ஆபத்து உள்ளது என அந்த மனுவில் சுட்டிக் காட் டப்பட்டுள்ளது. (ம)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மீனவர்களுக்கே இந்தநிலை ஏற் பட்டுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

இதனையடுத்து ஏனைய படகுகளில் தொழிலில் ஈடு பட்டுக்கொண்டிருந்த சுமார் 3000 மீனவர்கள் வெறுங்கை யுடன் கரைக்கு திரும்பியுள்ள னர். கச்சதீவுப் பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (ஓ)

## காக்கைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பஸ்தரே இவ்வாறு கைது செய் யப் பட்டுள்ளார்.

யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதி பரின் கீழான புலனாய்வுப் பிரிவி னருக்குப் பொது மக்கள் வழங் கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஓ)

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசிய ஐக்கியம் மற்றும் நல்லி ணக்கத்துக்கான அலுவலகத் தின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க, இப்போது அவசிய மானவிடயம் புதிய அரசமைப்பை உருவாக்குதலும், காணா மற் போனோர் தொடர்பான அலு வலகத்தை அமைத்தலும் மட் டுமே என்றும் தெரிவித்தார். அதனால் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கு ஒரு நீதிமன்றம் அவசியமே அற் றது என்றும் அவர் சொன்னார். (உ)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் கள் சிலரும் கலந்து கொண்ட னர்.

நல்லாட்சி அரசின் சில அமைச்சர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற் றச்சாட்டுக்களைக் கவனத்தில் கொண்டு அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள் வதற்கு ஜனாதிபதி தீர்மானித் திருந்தார்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுக்களில் ஏற்பட்ட இணக் கத்துக்கு அமைய அந்தத் தீர்மா னம் பிற்போடப்பட்டுள்ளது. (இ)

# விபத்தில் சிக்கிய லொறி கிணற்றுக்குள் பாய்ந்தது

## மூவர் படுகாயம்

தொண்டைமானாறு, பெப்.07

தனியார் பேருந்து மற்றும் லொறி ஆகிய வாகனங்கள் ஒன் றுடன் ஒன்று மோதி விபத்துக்குள் ளாகிய பின்னர், லொறி வீதியோ ரம் இருந்த மைல் கல்லையும் உடைத்துக்கொண்டு பாதுகாப் பற்ற கிணறு ஒன்றுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

தொண்டைமானாறு சந்தியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. இதன்போது, லொறியில் பய ணித்த மூவர் படுகாயமடைந்த னர். அவர்கள் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

மண்டானிலிருந்து தொண்டை மானாறு நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தும் வல் வெட்டித்துறையிலிருந்து தொண்டைமானாறு நோக்கி வந்துகொண்டிருந்த லொறியுமே விபத்தில் சிக்கின.

இந்த விபத்தில் லொறியில் பய ணித்துக்கொண்டிருந்த கொழும் பைச் சேர்ந்த எல்.எல்.பத்மசிறி (வயது 56), பாணந்துறையைச் சேர்ந்த முகமது பனசூன் (வயது 38), கல்முனையைச் சேர்ந்த சல்மீன் முகமது முகாப்தீன் (வயது 20) ஆகியோரே காய மடைந்தனர்.

இந்த விபத்துத் தொடர்பாக வல் வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-40)

# முருங்கை விருத்தியில் ஹெய்லீஸ்

வடக்கு மாகாணத்தில் முருங்கை மர வளர்ப்பை ஊக் குவிக்கும் பாரிய ஜீவாதாரத் திட் டம் ஒன்றை ஹெய்லீஸ் குழுமம் முன்னெடுத்து உள்ளது. அதன் முதற்கட்டமாக கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கைதடி, நாவற்குழி மகாவித்தியாலயத் தில் தனது ஆரம்பச் செயற்பாட் டைத் தொடங்கியது. நிகழ்வில் அந்தப் பகுதியின் பிரபலஸ்தர் கள் உட்பட பெரும் எண்ணிக் கையானோர் பங்குபற்றினர்.

முதற்கட்டமாக பத்தாயிரம் முருங்கை கன்றுகள் பயனாளி களுக்கு வழங்கப்பட்டன.

கிராமிய மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் நோக்கு டன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவு னியா மாவட்டங்களில் மொத் தம் ஒரு லட்சம் குடும்பங்க ளுக்கு முருங்கைக் கன்றுகள் வழங்குவதற்கு ஏற்பாடாகி உள் ளது.

கிராம மட்டத்தில் முன்னெ டுக்கப்படும் பாரிய திட்டத்தின் ஊடாக மக்களின் ஜீவாதா ரத்தை மேம்படுத்த வகை செய் யும் பொருட்டு, ஹெய்லீஸ் நிறு வனம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.



Integration for Inspirations மற்றும் Unity mission trust ஏற்பாட்டில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது. இதில் இளைஞர், யுவதிகள் முன்வந்து குருதிக்கொடை செய்திருந்தனர். (ம)

# எல்லை தாண்டிய இந்திய மீனவரால் 20 லட்சம் ரூபா வலைகள் அறுப்பு

## கட்டைக்காடு மீனவர்கள் பாதிப்பு

கட்டைக்காடு, பெப்.07

வெளிச்சமின்றி வந்த இந் திய ட்றோலர்கள் தமது 20 லட் சம் ரூபா பெறுமதியான வலை களை அறுத்துவிட்டுச் சென்றன என்றும் அதனால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் நோக்கியுள்ளனர் என்றும் கட் டைக்காடு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கிறிஸ்துராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு மேற்படி சம்பவம் இடம்பெற்றது எனவும் அவர் கூறினார்.

"எமது பிரதேசத் தொழிலா ளர்கள் ஞாயிற்றுக் கிழமை மாலை கடலில் வலைகளைப் பாய்ந்தனர். இரவு ஒன்பது மணி யளவில் வெளிச்சங்களை அணைத்துவிட்டு வந்த இந்திய ட்றோலர்கள் எமது வலைகளை அறுத்துவிட்டுச் சென்றன.

அறுக்கப்பட்ட வலைகளின் மொத்தப் பெறுமதி 20 லட்சம் ரூபா. நாங்கள் சிறுகச் சேர்த்த பெரும் தொகை நிதி வீணாகி யதால் கடற்றொழிலாளர்கள் பெரும் நஷ்டமடைந்துள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரி களுக்கு அறிவிக்கப்பட்டுள் ளது."–என கிறிஸ்துராஜா மேலும் தெரிவித்தார். (ம)

## சைட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தால் நிறைவேற்று அதிகாரிக்கு எந் தப் பாதிப்பும் ஏற்படவில்லை யெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரின் வாகனம் மீது 4 துப் பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன எனவும் முல்லேரியா பொலி ஸார் கூறியுள்ளனர் (ஓ)

## விபத்தில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வந்த முச்சக்கர வண்டி மீகம 5 ஆம் கட்டை பிரதான வீதிக்குள் பிரவேசிக்கும் போது கட்டுப் பாட்டை இழந்து டிப்பருடன் மோதியுள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலி பென்ன பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.130 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் மணிமனையில் தயாராகி 67/3 கே.கே.எஸ். வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது